www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.O

# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 24 | 01 மாசி 1996 | விலை: ரூபா 7.00

# அப்பாவி மக்களைக் கொல்வது உரிமைப் போராட்டத்திற்கு உதவாது







புலிகள் மீண்டும் கொழும்பில் குண்டு வெடிப்பு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள். யாழ்ப்பாணத்தை இழந்து, வன்னியில் குடிபுகுந்துள்ள புலிகளின் விரக்தியின் வடிவங்களே இவைகளாகும். கொழும்பில் நடாத்தும் குண்டுவெடிப்புக்கள், அரசாங்கத்திற்கு நெருக்குவாரங்களைக் கொடுக்கும் ஓர் வடிவமாக புலிகள் கருதலாம். ஆனால், புலிகளின் தற்கொலைத் தாக்குதல்களால் ஏற்படும் அப்பாவி மக்களின் உயிரிழப்புக்களை சர்வதேச சமூகம் எந்தவிதத்திலும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. ஏற்கனவே விடுதலைப் போராட்டத்தை கேலிக் கூத்தாக்கி, சர்வதேச சமூகத்தில் பயங்கரவாதிகள் எனப் பெயர் பெற்றுக் கொண்ட புலிகளின் இந்நடவடிக்கைகள், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எந்ததவிதத்திலும் உதவப் போவதில்லை.

புலிகளைப் பொறுத்தவரை, தென்னிலங்கையில் குழப்பத்தை உருவாக்குவதன் மூலம் தமிழ்–சிங்கள கலவரம் ஒன்றை உருவாக்கி, அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதும் ஓர் நோக்கமாக இருக்கலாம். ஜனவரி 31ம் திகதி கொழும்பில் மத்திய வங்கிக்கு முன்னர் நடந்த குண்டுத் தாக்குதலும், இதனால் ஏற்பட்ட மனித உயிர்களின் பாரிய இழப்புக்களும், அழிவுகளும் இதையே காட்டுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா அவர்கள், வட–கிழக்கு இனப்பிரச்சினையின் தீர்வுக்கு சில ஆலோசனைகளை முன்வைத்துள்ள சூழ்நிலையில் புலிகளின் இத் தாக்குதல்கள், இதையும் குழப்பத்திற்குள்ளாக்கும் என்பதில் ஐயமில்லை. ஏற்கனவே சிங்கள இனவாதிகளின் நெருக்குதல்களுக்குள்ளாக்கப்பட்டிருக்கும் இவ்வாலோசனைகள், புலிகளின் இவ்வாறான தாக்குதல்களால் இன்னும் பின்தள்ளப்படலாம்.

திருமதி சந்திரிகா அவர்களின் ஆலோசனைகள், இன்னும் செழுமைப்படுத்தப்பட வேண்டும், திருத்தப்பட வேண்டும் என தமிழ்க்கட்சிகள் குரலெழுப்பும் இச்சமயத்தில், இக் குண்டுவெடிப்புகள் நடத்தப்படுவதானது, இதனைத் திருத்தவோ செழுமைப்படுத்தவோ எடுக்கும் முயற்சிகளையும் முறியடித்துவிடும் முயற்சியாகவுமே உள்ளது.

புலிகளின் இத் தாக்குதல்களை ஈ.பி.ஆர்.எல்.எஃப். வன்மையாகக் கண்டிக்கிறது.



## ஒற்றுமை இல்லாது உரிமைகளும் இல்லை

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான ஓர் முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டம் தற்போது தோன்றியுள்ளது. ஒருபுறம், கெடுபிடி யுத்தத்தில் பாரிய திருப்பங்கள் நிகழ்ந்திருக்கும் வேளையில், மறுபுறம் அரசியல் தீர்வுக்கான சில முக்கியமான நகர்வுகள் நிகழ்கின்றன.

இத்தருணத்தில் தமிழ் பேசும் மக்களின் நீண்டகால நலனைத் தீர்மானிக்கும் அறுதியான முடிவுகள் எடுக்கப்பட்டாக வேண்டும். அத்தகைய இடத்தை எந்தவொரு தனிப்பட்ட கட்சியாலும் நிரப்ப முடியாத யதார்த்த சூழ்நிலையில் சகல தமிழ்க் கட்சிகளதும் கூட்டான தலைமைத்துவத்தை ஸ்தாபிக்க வேண்டிய கடமைப்பாடு பொறுப்பு வாய்ந்த ஒவ்வோர் கட்சிக்கும் உரியதாகும்.

தொடர்ச்சி 11

## வதந்திக்கு மறுப்பு

"ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எஃப்) கிழக்கு மாகாணத்தில் ஆயுதம் தரித்து இராணுவத்தினருக்கு உதவியாக செயற்படுகின்றார்கள்" என கடந்த வாரம் பத்திரிகைகளில் வந்த செய்திகள் உண்மைக்குப் புறம்பான வெறும் வதந்திகளே என்பதைச் சுட்டிக் காட்டுவதுடன், எமது தோழர்கள் அப்படியான எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என்பதையும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தெளிவுபடுத்த விரும்புகின்றது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஜனநாயகத்திலும், அதை ஒட்டிய போராட்டங்களிலும் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், மக்களை அணிதிரட்டிய-அவர்களின் போராட்டங்களினூடாகவே எமது முழுமையான உரிமைகளைப் பெறலாம் என்பதிலும் நம்பிக்கை கொண்டுள்ளது. எனவே எமது கட்சியை கொச்சைப்படுத்த, கேவலப்படுத்த சில பத்திரிகைகள் நடாத்தும் பிரச்சாரங்களில் மக்கள் ஏமாந்துவிடக் கூடாதென ஈ.பி.ஆர்.எல்.எஃப். சகல தமிழ் பேசும் மக்களையும் கேட்டுக் கொள்கின்றது.


- தலைமுறையின் அழிவு 03
- இனிய தமிழ் மக்களே! 04
- இலங்கையின் மாகாண சபைக் கலைப்புகளின் வரலாறு–ஒரு பார்வை 05
- அரசு + புலிகள் + தமிழ் பா.உ. க்கள் = சிக்கலில் மக்கள் 06
- வடக்கிலிருந்து.... 07
- இதயங்களை வெல்ல இதுவல்ல வழி 08
- போடியாரும் ஹாஜியாரும் 09
- குறுக்கெழுத்துப் போட்டி-20 09
- பிரபாகரனை வெல்ல முடியுமா? 10
- அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய காரியங்கள் 11
- தமிழர் தரப்பு என்ன செய்யப் போகிறது? 12
- மூக்கும் முழியுமாய் வாழவே பிறந்தோம் 12


படிப்பகம்

www.padippakam.com



# கண்ணோட்டம்

## ஜனாதிபதி சொல்வதுதான் தீர்வா?

இனப்பிரச்சினை தீர்விற்கு அரசியல் தீர்வே சிறந்த வழியென ஜனாதிபதி அவர்கள் வலியுறுத்தி வந்துள்ளார்கள். இதனையே பல அமைச்சர்களும் கூட வலியுறுத்தி வந்துள்ளனர். இவ்வரசியல் தீர்விற்கான ஆலோசனைகள் என்ற பெயரில் 1995 ஆகஸ்ட் 3ம் திகதி அதிகாரப் பகிர்வு தொடர்பான சில ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டன. இவ்வாலோசனைகளை "நீலன்-பீரிஸ் ஆலோசனைகள்" என கொழும்பு பத்திரிகைகள் சில குறிப்பிடுவதுண்டு. அது எவ்வளவுதூரம் உண்மையோ பொய்யோ தெரியாது. ஆனால் இவ்வாலோசனைகள் தொடர்பாக எந்த ஓர் தமிழ் கட்சியுடனும் பேச்சுவார்த்தை நடாத்தப்படவில்லை என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

1995 ஆகஸ்ட் 3ம் 4ம் திகதிகளில் பல்வேறுபட்ட கட்சிகளையும் அழைத்த ஜனாதிபதி அவர்கள், தீர்விற்கான தனது ஆலோசனைகளை வழங்கினார். இவை தொடர்பான திருத்தங்களையும், ஆலோசனைகளையும் வழங்கும்படியும் கேட்டிருந்தார். ஒரு சில தமிழ்க் கட்சிகள் இவ்வாலோசனைகளை செழுமைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தமது திருத்தங்களையும் அரசுக்கு சமர்ப்பித்திருந்தார்கள். அதிலும் முக்கியமாக ஈ.பி.ஆர்.எல்.எப். தனது திருத்தங்களை ஜனாதிபதிக்கு சமர்ப்பித்தது மாத்திரமல்லாமல், இவை தொடர்பாக கலந்துரையாட ஓர் சந்தர்ப்பத்தையும் கேட்டது. ஆனால் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. பின்னர் நவம்பர் மாதம் மீண்டும் இது தொடர்பாக கலந்துரையாட ஓர் சந்தர்ப்பம் கேட்டபொழுது அதற்கும் பதில் கிடைக்கவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாகப் பேசுவதற்கு அரசாங்கம் தமிழ்க் கட்சிகளுக்கு எந்த மேடையையும் அமைத்துக் கொடுக்கவில்லை. தமிழ்க் கட்சிகளுடன் கலந்துரையாடாமலேயே சில ஆலோசனைகளை சமர்ப்பித்த ஜனாதிபதி அவர்கள், தான் சமர்ப்பித்த ஆலோசனைகள் தொடர்பான நன்மை தீமைகளைப் பற்றிக்கூட தமிழ்க்கட்சிகளுடன் பேசவில்லை.

இன்று, தனது அரைகுறை ஆலோசனைகளின் அடிப்படையில் ஓர் சட்டநகலை வரைந்து அதனையும் வெளியிட்டுள்ளனர். இது பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் மாத்திரமே விவாதிக்க முடியும். இதற்கு திருத்தங்கள் செய்வதென்றால் கூட பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு நாம் எழுதி அனுப்பலாம். ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக்கொள்ளாததும் அவர்களைப் பொறுத்தது.

வட-கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்தில் 3 தமிழ் கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. இன்னும் 3 தமிழ்க்கட்சிகள் பாராளுமன்றத்துக்கு வெளியில் உள்ளன. ஆனால் யாரிடமும் எந்தப் பேச்சுவார்த்தையும் நடாத்தாமல் அரசு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வினை வைப்பதுதான் வேடிக்கையானது. இன்று பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் இவ்வரசியல் நகல் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கு இறுதி வடிவம் கொடுக்கும்படி அரசு கேட்டுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவென்பது பல கட்சிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு சபை. இங்கு பெரும்பான்மை சிங்களப் பிரதிநிதிகள், சிறுபான்மையாக தமிழ் பிரதிநிதிகளும் உள்ளனர். இங்கு சகல கட்சிகளுக்குமிடையில் ஓர் கருத்தொருமிப்பு ஏற்பட்டாலே 2/3 பெரும்பான்மையை பாராளுமன்றத்தில் ஏற்படுத்தலாம் என்பதற்காகவே இந்த ஏற்பாடு. ஆனால் பெரும்பான்மை சிங்களப் பிரதிநிதிகள் இச்சட்டநகலை செழுமைப்படுத்துவதற்கு பதிலாக இதனைக் குறைத்து வலுவற்றதாக்கவே முயற்சிப்பார்கள். எனவே இப்படியான பாராளுமன்றத் தெரிவுக்குழு தமிழ் மக்களுக்கு நியாயமான ஓர் தீர்வினை ஏற்படுத்தும் மேடையாக நிச்சயமாக இருக்காது.

அதிகார அலகு (வட-கிழக்கு இணைந்த பகுதி), அதிகாரப் பகிர்வென பல விடயங்கள் பேசித் தீர்க்கப்பட வேண்டியவை. ஏனெனில் இவற்றுக்கான தீர்வுதான் இனப்பிரச்சினைக்கான தீர்வாக அமைய முடியும் எனக் கூறப்படுகின்றது. எனவே முதலாவது கட்டமாக அரசு தமிழ் கட்சிகளுடன் பேசி இவை தொடர்பான திட்டவட்டமான தீர்வுகளுக்கு வரவேண்டும். தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ் கட்சிகளுடன் பேசாமல் அரசு தீர்விற்கு வருவதென்பது அரசின் கபடத்தனத்தையே காட்டுமே அல்லாமல்; தீர்வின்மேல் கொண்டுள்ள அக்கறையைக் காட்டாது.

சரியானதொரு பேச்சுவார்த்தை மேடையிலேயே இரு பகுதியினரும் பல விடயங்களைப் பேசமுடியும், விட்டுக்கொடுப்புகள், ஒத்துழைப்புக்கள் மூலம் நியாயமான தீர்வு ஒன்றை எட்டமுடியும். எல்லைகளை மீள்நிர்ணயம் செய்வதோ, அன்றி எவ்வாறான அதிகாரங்களை மத்திய- பிராந்திய சபைகள் பகிர்ந்து கொள்வதோ என்பதனைப் பற்றி பேசமுடியும். Give and Take, Compromise என்பனவெல்லாம் இங்கேதான் சாத்தியமானது. அப்படி வரக்கூடிய தீர்வு ஓரளவுக்காவது தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாய் இருக்கும். அதன்பின் இதற்கான ஒப்புதலை எதிர்க் கட்சியினரிடம்பெற்று அதை சட்டவடிவமாக்குதலே சரியான வழிமுறையாகஇருக்கும்.

ஆனால் அதனைவிடுத்து, தமிழ்க்கட்சிகளுடன் எவ்வித பேச்சுவார்த்தையும் நடத்தாமல் அரசு தான் விரும்பிய தீர்வொன்றினை பாராளுமன்றத்தெரிவுக்குழுவிற்கு சமர்பிப்பதும், அங்கு அது இன்னும் குறைக்கப்படுதலும். சிங்களக் கட்சிகளுக்கு சரியாக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் தீர்வாக அது இருக்காது.

1987ம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் கொண்டுவரப்பட்ட 13வது அரசியல் சாசனத்திருத்தச் சட்டம் எந்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கும் போகவில்லை. ஏனெனில் அரசுக்கு 2/3 பெரும்பான்மை இருந்தது. இந்திய அரசும் வற்புறுத்தியது. எனவே அது சட்டமாகியது. இங்கு 2/3 பெரும்பான்மை இல்லை என்பதாலேயே இத்தெரிவுக்குழு நாடகம் எல்லாம் நடாத்தப்படுகின்றது.

இங்கு அரசாங்கம் தமிழ்க்கட்சிகளுடன் பேசி ஓர் முழுமையான ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வொன்றினை முன்வைத்து அதற்கு எதிர்க்கட்சிகளின் ஒப்புதலை கேட்டிருக்கலாம். ஒப்புதல் கொடுக்க அவர்கள் சங்கடப்படுவார்கள், இல்லையேல் மறுப்பார்கள் என்பதெல்லாம் உண்மை. இந்நிலையில் மாற்று அரசாங்கமாக வரக்கூடிய அவர்கள்மீது நிச்சயமாக சர்வதேச நிர்ப்பந்தத்தை அரசால் கொண்டுவர முடியும். அதனை விடுத்து, தான் விரும்பியதுதான் தீர்ப்பு, அவர்கள் கொடுப்பதை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென அரசோ, ஜனாதிபதியே கருதினால் அவர்கள் தவறிழைக்கின்றார்கள் என்றே அர்த்தமாகும்.

புலிகள் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை, அவர்கள் அதனைக் குழப்புகின்றார்கள் என்ற காரணத்தைக் காட்டி தன் விருப்பத்துக்கு அரசு நடப்பது தவறானது. அப்படியாயின் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட கட்சிகளோ, ஜனநாயகப் பாதைக்கு வந்த கட்சிகளோ பேச்சுவார்த்தைக்கு லாயக்கற்றதென்று ஜனாதிபதி கருதுகின்றாரா? இல்லையேல் எல்லோருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள், இவர்களும் மிக அதிகளவான கோரிக்கையை முன்வைப்பார்கள், எனவே இவர்களுடனும் பேசாமல் விடுவதுதான் சிறந்ததென ஜனாதிபதி யோசிக்கின்றாரா?

எனவே ஜனாதிபதி அவர்கள் குறிப்பிடும் அமைதி, சமாதானம், பொருளாதார முன்னேற்றம் எல்லாவற்றிலும் நம்பிக்கை கொண்டவராக இருந்தால், இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சரியான அணுகுமுறைகளை அவர் வகுத்துக் கொள்ள வேண்டும். அவர் எடுக்கும் நடவடிக்கைகள், சமாதானத்தையும் அரசியல் தீர்வையும் பற்றி பேசிக்கொண்டு அதற்கெதிராகப் போவதாகவே தோன்றுகின்றது.




21.01.1996 அன்று காலை 11.00 மணியளவில் வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இலுப்பைக்குளம் கிராமத்தில் கிராமவாசிகளதும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இனதும் முயற்சியால் சனசமூக நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இந் நூல்நிலையத்திற்கென 4 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். வழங்கியது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இன் மத்திய குழு உறுப்பினர் தி. சிறீதரன், முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராஜா குகனேஸ்வரன், கிராம அபிவிருத்திச் சபைத் தலைவர் குரூஸ் ஆகியோரை படத்தில் காண்கிறீர்கள்.

---

"அறிவில்லாதவனும், தர்மத்தின் பாதையை நெருங்காதவனும் கூட, யுத்தம் செய்து ராஜ்யத்தைப் பெறுகிறான். அறிவுள்ளவனும், தர்மத்தின் பாதையில் செல்பவனும் கூட, யுத்தத்தில் தோற்று செல்வத்தை இழக்கிறான். அப்படி இருக்க, யுத்தம் செய்து வென்று ராஜ்யத்தைப் பெறுவதால் உமக்கு என்ன கீர்த்தி கிட்டப் போகிறது? கோபம் மனிதர்களின் விரோதி. உமது புகழை அது திருடிச் சென்றுவிடும். ஆகையால் கோபத்தை விட்டு அமைதியைப் பெறுவீராக!

ஒரு மனிதன் பூமி அனைத்தையும் வென்றாலும், அவனை மரணம் நெருங்காமல் விட்டுவிடுமா? உலகத்தை ஜெயித்தவன் என்பதால் ஒருவனை இன்ப துன்பங்கள் மாறி மாறி அணுகாமல் விட்டுவிடுமா? இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து யுத்தம் செய்யும் எண்ணத்தைக் கைவிடுங்கள்."

- தருமருக்கு சஞ்சயன் கூறியது. (மகாபாரதம்-உத்யோக பர்வம்-அத்தியாயம்-1)

---

### தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதியகண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்ப வேண்டிய முகவரி:

**புதியகண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு**

புதியகண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

29A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-2398

88/2, வாடிவீட்டு வீதி,
கல்முனை.

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-2070

மன்னார்
☎ 023-2370

வெளிநாட்டு முகவரிகள்:

Post Bag: 1041,
Madras-17,
India.

E.P.I.C
Box No: 95,
95144, Garges Les,
Gonnesse Cedex,
France.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

P.Fach: 100206,
44002 Dortmund,
Germany.

P.Box: 6800,
Agincourt,
Ont-MIS3C6,
Canada.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

படிப்பகம்

www.padippakam.com



# தலைமுறையின் அழிவைத் தடுப்பது எப்படி?



வரலாற்றில் முதல் தடவையாக யாழ்ப்பாணத்தை தலைநகராய் கொண்ட வலிகாமத்தின் 5 லட்சம் மக்களும் அகதிகளாகியுள்ள சோகம் நடந்துவிட்டது. இன்று யாழ்ப்பாணத்திற்கு மக்கள் மீளச் சென்று குடியேறுவதற்கு புலிகள் தடை விதித்துள்ளனர்.

அதுமாத்திரமல்லாமல் யாழ்ப்பாணத்தின் நிர்வாகத்தை நடாத்தக்கூடிய மூலவளங்கள் யாவும் புலிகளால் அழிக்கப்பட்டுள்ளது. கச்சேரி, யாழ்ப்பாணம் வைத்தியசாலை, பல்கலைக்கழகம் போன்ற பல கட்டிடங்கள் புலிகளால் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது. இவ்விடங்களிலிருந்த சகல பொருட்களும் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. வைத்தியசாலையின் கட்டில்கள் தொடக்கம் சத்திர சிகிச்சை உபகரணங்கள் யாவும் எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று பல்கலைக்கழகத்தின் ஆய்வுகூடப் பொருட்களும், புத்தகங்களும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. பல்வேறுபட்ட கட்டிடங்களின் கூரைகள் யாவும் பிரிக்கப்பட்டு கிளிநொச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. மொத்தத்தில் மக்கள் மீளச் சென்று குடியேறக்கூடாது என்ற அடிப்படையில் காரியங்கள் நடைபெற்றுள்ளன.

ஒரு சில மணி நேரத்திலேயே மக்களை வெளியேற்றி இரவோடு இரவாக இவர்கள் துரத்தியதில் பல முதியவர்களும் சிறார்களும் அனாவசியமாக இறந்து போயுள்ளார்கள். இன்று தென்மராட்சியில், வடமராட்சியில் இருக்கும் அகதிகள் அனைவரையும் கிளிநொச்சிக்குத் துரத்தும் நடவடிக்கையில் இவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

இவர்களைப் பொறுத்தவரையில் தமது போராட்டம் தொடரப்பட வேண்டும் இதற்கு மக்கள் எவ்வகையில் கஷ்டப்பட்டாலும் அது சரியானதே. ஆனால் இதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளைப்பற்றி இவர்கள் சிறிதும் சிந்திப்பது கிடையாது.

## இன அழிவைப் பார்த்திருப்பதா?

கடந்த 15வருட யுத்தத்தில் ஏற்கனவே கல்வியிலும், பொருளாதாரத்திலும், சுகாதாரச் சீர்கேடுகளிலும் மக்கள் முழுமையாகக் கஷ்டப்பட்டுள்ளார்கள். ஆனால் இன்று அதிலும் விட மிக மோசமான நிலைமைக்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். ஒரு தலைமுறையே கேள்விக்குரியதாக உள்ளது.

வேலையற்று கல்வி வசதியற்று, குழந்தைகளுக்கான சரியான உணவுப் பொருட்களற்று மக்கள் சொல்லொணாத் துன்பத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். இதனால் பாதிக்கப்படுவது எமது தமிழ்ச் சமூகமே என்பதை புலிகள் மறந்துவிட்டார்கள்.

வன்னியில் இவர்களைக் குடியேற்றுவதன் மூலம் புலிகளின் அனாவசியப் போராட்டமானது இன்னும் சில காலங்களுக்குத் தொடர்ந்து செல்லலாம். மக்கள் தமது கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றார்களென புலிகளும் மார்தட்டிக் கொள்ளலாம். ஆனால் அங்கு இருக்கக்கூடிய மக்கள் எதிர்காலத்தில் எமது நாட்டைக் கொண்டு நடத்தக்கூடிய வல்லமை உள்ளவர்களாக, ஒரு ஆரோக்கியமான சமுதாயமாக நிச்சயமாக இருக்க முடியாது.

மாணவர்களுக்கான கல்வியோ, வேலை வாய்ப்போ புலிகளால் வழங்க முடியாது. அதேசமயம் இலட்சக்கணக்கான அகதிகளை வைத்து இவர்களால் பராமரிக்கவும் முடியாது. மக்களை அகதிகளாக்கிய புலிகளே தமது எதிரியான அரசாங்கத்திடம் மக்களுக்கு நிவாரணம் கேட்டுப் போராட்டமும் நடாத்துவார்கள். இவ்வாறான மோசமான நிலைக்கு எமது மக்கள் தள்ளப்பட்டுள்ளதை கைகட்டி வாய்பொத்தி வேடிக்கை பார்க்க முடியாது.

புலிகளின் போராட்டமானது தமிழீழத்திற்கோ, தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கானதோ அல்ல, மாறாக அவர்களை அழித்தொழிப்பதற்கான ஒரு நடவடிக்கையாகவே இவர்களது நடவடிக்கைகள் அமைந்து வருகின்றன. வன்னிப் பெருநிலப் பரப்பில் இம்மக்களை வைத்திருப்பதன்மூலம் சிறார்களையும், இளைஞர்களையும், யுவதிகளையும் தமது இயக்கத்தில் இலகுவாக சேர்க்க முடியுமென இவர்கள் திட்டமிட்டே இக்காரியத்தை செய்வதாகத் தோன்றுகின்றது. இவர்களின் குறுகிய நலன்களை நோக்கமாகக் கொண்டு ஒரு இனத்தையே அழிவுக்குள்ளாக்குவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கப் போகின்றோமா?

## வதைபடுவதொன்று தானா வாழ்க்கை?

இன்று அகதிகளாக்கப்பட்டுள்ள அத்தனை மக்களுக்கும் இருப்பதற்கு வீடோ சிறு குடிசையோ இருந்தது. படிப்பதற்குப் பாடசாலையும் பல்கலைக்கழகமும் இருந்தன. குறைந்தபட்சத் தொழில்களும் வேலைவாய்ப்பும் இருந்தது.

ஆனால் இவை யாவும் இன்று புலிகளால் பிடுங்கப்பட்டு, இவர்கள் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர். மக்களை அகதிகளாக்கித்தான் போராட்டத்தைத் தொடரவேண்டும் என்பதல்ல. மக்களைப் பிச்சைக்காரர்களாகவும், வேலையில்லாதவர்களாகவும், சாப்பாட்டிற்குக் கையேந்துபவர்களாகவும் மாற்றுவதன் மூலம் ஓர் ஆரோக்கியமான சமுதாயத்தைப் படைத்துவிட முடியாது.

மக்கள் கஷ்டப்பட்டால்தான் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என புலிகள் சிந்திப்பார்களாயின், அவர்கள் பாரிய பிழையை விடுகின்றார்கள் என்று அர்த்தமாகும். மக்களை அடக்குவதும், அவர்களை துன்புறுத்துவதும், அவர்களைப் பலாத்காரமாக அகதிகளாக்குவதும் மக்கள் மத்தியல் புலிகளுக்கெதிரான போக்கையே உருவாக்கும். இதனை இன்று புரியாவிட்டாலும் நாளை புரியாவிட்டாலும் வெகுவிரைவிலேயே மக்கள் இவர்களுக்கு புரியவைப்பார்கள்.

ஏற்கனவே கைதடி, நாவற்குழி, சாவகச்சேரி, பருத்தித்துறை, முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் புலிகளுக்கும் மக்களுக்குமிடையில் மோதல்கள் ஆரம்பித்துள்ளன. தமது துப்பாக்கிகளின் மூலம் இவற்றை அடக்கி விடலாம் என நினைத்தால், அது அவர்களுக்கு அழிவையே உண்டுபண்ணும்.

## சட்டியிலிருந்து அடுப்பில் விழுவது விடுதலையல்ல

எமது மக்களில், அவர்களது எதிர்காலத்தில் நாம் அக்கறை கொண்டுள்ளவர்களாக இருந்தால்... அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான முழு முயற்சிகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும். யாழ்ப்பாணம் முழுமையாகவே அழிந்தொழிந்து போவதை நாம் விரும்புகின்றோமா? இல்லையேல் அதனைப் பாதுகாக்கப் போகின்றோமா? தோட்டங்களில் புல்லுப்பிடுங்கி சிறுகச் சிறுகச் சேமித்த பணத்தால் கட்டிய வீடுவாசல்களை அனாவசியமாக அழித்தொழிக்கப் போகின்றோமா? இதற்கு ஒருக்காலும் நாம் அனுமதிக்க முடியாது. அனுமதிக்கவும் கூடாது.

போராட்டத்தை தொடர்வதற்கு பல வழிகளுண்டு. மக்களைக் கேடயங்களாக்கி, அவர்களைத் துன்புறுத்தி, அவர்களை அகதிகளாக்குவதன் மூலம்தான் போராட்டம் தொடரப்பட முடியுமென்பதல்ல. மக்களின் பிரச்சினையை நாட்டின் சூழ்நிலையை இந்த பிராந்திய அரசியல் சூழ்நிலையை நன்றாகப் புரிந்து கொள்பவர்களாலேயே சரியான முடிவுகளை எடுக்க முடியும்.

ஆனால் வெறும் துப்பாக்கியிலும், கொலைகளிலும் நம்பிக்கை வைத்து தமது அராஜகங்களைத் தொடர விரும்புவோர்க்கு சரியான சிந்தனை இருக்க முடியாது. வெறும் தாக்குதல்களும், இராணுவ சாகசங்களும் தீர்வினைத் தந்துவிடாது. அதற்கு அரசியல் விவேகமும், சாணக்கியமும், விடயங்களைப் பகுத்தறிந்து பார்க்கக்கூடிய தன்மையும் இருக்க வேண்டும்.

துப்பாக்கி முனையில் சகலதையும் சாதிக்க முடியுமென்பது அறிவார்ந்த செயலல்ல. இதனைப் புலிகளும் பிரபாகரனும் புரிந்து கொள்ள வேண்டும். கொலைவெறி பிடித்த கொள்ளைக் கோஷ்டிகளைப் போல் ஒரு விடுதலை இயக்கம் எனக் கூறிக்கொள்ளும் புலிகள் இயக்கம் இருக்கக் கூடாது.

சுதந்திரம் என்பதும் விடுதலை என்பதும் மக்கள் அடக்குமுறைகளில் இருந்து விடுபட்டு, தான் விரும்பியதை எழுதவும் பேசவும் தன்னைத்தானே பராமரித்துக் கொள்ளுவதற்குமான ஓர் ஏற்பாடாகும். அவ்வாறே ஒரு சமூகத்தின், இனத்தின் விடுதலை என்பதும் சகல அடக்குமுறைகளிலிருந்தும் விடுபட்டு தம்மைத் தாமே ஆள்வதற்கான ஓர் ஏற்பாடாகும். ஆனால் இங்கு மக்களின் விடுதலை என்று பேசுபவர்கள், அவர்களைத் துப்பாக்கி முனையில் மிரட்டி, அவர்களை அடக்கி ஒடுக்கி மிருகங்களிலும் விட கேவலமாக வைத்திருப்பதானது விடுதலையுமல்ல சுதந்திரமுமல்ல.

உரிமைகளுக்காக நாம் சிறிலங்கா அரசாங்கத்திற்கெதிராகப் போராட வேண்டிய அதேசமயம் எமது தற்போதைய தலைமுறையை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக, புலிகளுக்கெதிராகவும் நாம் போராட வேண்டியுள்ளது.

ஆகவே எமது உரிமைகளுக்காக நாம் ஒன்றிணைந்து குரல்கொடுக்க வேண்டிய அதேசமயம், நாம் மனிதர்களாக சீவிப்பதற்கும் சகல அடக்குமுறைகளுக்கெதிராகவும் போராடுவது இன்றைய கட்டாயம் என்பதையும் உணரவேண்டும். ●

---

யஸர் அரபாத் 40 வருடங்கள் போராடி பலஸ்தீன மக்களுக்கு ஓரளவு சுயாட்சியைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றார். இதன் உலக முக்கியத்துவம் என்ன? இந்தத் தேர்தல் நடந்து முடிந்துவிட்டதால், பலஸ்தீனப் பிரச்சினை தீர்ந்து விட்டது என்று பொருளல்ல. இந்தத் தேர்தல் ஒரு உண்மையைப் புலப்படுத்தியிருக்கிறது. பலஸ்தீன மக்கள் தொடர்ந்தும் துப்பாக்கி ஏந்துவதற்குத் தயாராக இல்லை என்பது ஒன்று; இன்னும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் யூதர்களோடு ஒன்றிணைந்து வாழ வேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியாதது மற்றொன்று. இந்த யதார்த்த உண்மையை பலஸ்தீன மக்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள். இதன் விளைவுதான் ஹமாஸ் போன்ற இயக்கங்கள் எத்தனையோ வேண்டுகோள் விடுத்தும் மக்கள் யஸர் அரபாத்துக்கு ஏகமனதான ஆதரவை வழங்கியிருக்கிறார்கள். அதாவது, பலஸ்தீன மக்கள் இப்போது ஜனநாயகப் பாதையை ஏற்றுள்ளனர். இந்தப் பாதையில் இன்னும் எத்தனையோ இடையூறுகள் ஏற்படக் கூடும். அவர்கள் இதுவரை காலமும் சந்தித்த இடர்களைப்போல இனிவரும் துன்பங்கள் அவ்வளவு பாரதூரமானவையாக இருக்க மாட்டாது என்பது மாத்திரம் நிச்சயமானது. பலஸ்தீனத்தில் அரசு உருவாகிறதோ இல்லையோ; ஆனால் அங்கு அரசை அமைப்பதற்கான அடித்தளம் இடப்பட்டிருக்கின்றது. அந்த அரசு இஸ்ரேலையும், பலஸ்தீனத்தையும் இணைத்து வைக்கும் ஒரு சமஷ்டி அரசாக விளங்கும் என்பது மாத்திரம் எதிர்காலத்துக்கு நாம் கொண்டு செல்லக் கூடிய உண்மை.

- பி.முத்தையா (தினகரன் தை 28, 1996)

“

நாலரைலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இந்தப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டு, யாழ்ப்பாண தீபகற்பத்தின் பிற பகுதிகளில் பரிதாப வாழ்க்கையில் உழலுகிறார்கள். தண்ணீரோ, தங்குமிடமோ, சுகாதார வசதியோ, குறைந்தபட்ச மருத்துவ உதவியோ கூட கிடைக்க வழியில்லாமல் போயிற்று. ஊர்விட்டு ஊர் போனதால் ஏற்பட்ட உடல்ரீதியான கஷ்டம் தவிர மன வேதனையும் சொல்லி மாளாது; அவர்கள் வாழ்வே அடியோடு உருக்குலைந்து போயிற்று.

- நீலன் திருச்செல்வம் - இந்தியா டுடே டிசம்பர் 6-20, 1995.

”

“

வன்னி ஒரு வளமான பூமி, விவசாயத்திற்கு ஏற்ற இடம். புலிகளின் வேண்டுகோளை ஏற்று நிறைய மக்கள் வன்னிப்பகுதிக்கு கிளம்பிப்போய் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட நிலத்தை உழ ஆரம்பித்து விட்டார்கள். ஒரு ஆரோக்கியமான வளம் கொழிக்கும் வாழ்வை நோக்கி நகர ஆரம்பித்திருக்கிறார்கள்.

- புலிகளின் அறிக்கை - 21நவம்பர் 95 (ஈழம்)

”

படிப்பகம்



அன்பிற்கினிய தமிழ் மக்களுக்கு,

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து ஒன்றரை வருடங்களின் பின்னர் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அறிவித்திருந்த அதிகாரப் பகிர்வின் அரசியல் சட்ட வரைவு நகலை வெளியிட்டுள்ளது. 1995ம் ஆண்டு ஆவணி மாதம் 3ம் திகதி வெளியிட்ட ஜனாதிபதியின் ஆலோசனைகளின் அடிப்படையில் இந்நகல் சட்ட வரைவு வெளியிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஜனாதிபதியின் ஆவணி 3ம் திகதிய ஆலோசனைகளில் இருந்து மிகவும் மாறுபட்டதாகவே இந்நகல் சட்டவரைவு உள்ளது என்பதே உண்மை.

இவ் ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே, இவை திருத்தப்பட வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எப். வலியுறுத்தி வந்தது. அதற்கான திருத்தங்களையும் ஜனாதிபதிக்கும், அரசியல் சாசன சீர்திருத்த அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் அவர்களுக்கும் அது சமர்பித்திருந்தது.

ஆனால் அவை கவனத்தில் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் ஜனாதிபதியின் அரைகுறை ஆலோசனைகள் மேலும் குறைக்கப்பட்ட நிலையில் இன்று நகல் சட்டவரைவாக வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கு ஆதரவாக, இந்திய மாநிலங்களை கலைக்கும் அதிகாரம் அங்கிருக்கக்கூடிய ஆளுநருக்கு உண்டு, இங்கு நாம் அதனை முற்றாக இல்லாமல் செய்துள்ளோம் என விளக்கம் கூறப்பட்டது. ஆனால் இன்றைய சட்ட நகல், இவ்விடயத்திலும்கூட மிக மோசடித்தனமாகவே உள்ளது.

ஜனாதிபதி, பிராந்திய சபையை கலைக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது மாத்திரமல்லாமல், இதற்கெதிராக யாரும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவும் முடியாது என்ற வகையிலேயே சட்ட வரைவு இயற்றப்பட்டுள்ளது.

இது மாத்திரமல்லாமல், பிராந்திய சபையின் கீழ் வரக்கூடிய நீதிச்சேவை ஆணைக்குழு, பொலிஸ் சேவை ஆணைக்குழு, போன்றவை மத்திய அரசால் நேரடியாக நியமிக்கப்படும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. இதனடிப்படையில் பிராந்திய நிர்வாகத்தில் மத்திய அரசு, தான் விரும்பிய போதெல்லாம் தலையிடுவதற்கான ஓர் வழியை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

இது பிராந்திய நிர்வாகத்திற்குள் எப்பொழுதும் சீர்கேடுகளையும் சிக்கல்களையுமே உருவாக்கும். இப்பத்திரிகையின் இன்னுமோர் கட்டுரையில் இவ்விடயம் மிகவும் விரிவாக ஆராயப்படுவதால் இங்கு அதனை நான் விரிவாக விளக்க விரும்பவில்லை.

ஆனால் மொத்தத்தில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய தீர்வொன்றிற்குப் பதிலாக சிங்கள இனத்துவேசிகளை திருப்திப் படுத்தும் தீர்வொன்றினையே ஜனாதிபதி அவர்கள் அறிவித்துள்ளார்கள். இது நிச்சயமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை எவ்விதத்திலும் தீர்த்துவிடப் போவதில்லை.

தமது கலை, கலாச்சாரம் பண்பாடுகளை பேணிப் பாதுகாக்க கூடியவகையில் வட-கிழக்கு ஒரே இராட்சியமாக இருக்க வேண்டும் என்பதையும் இச் சிங்களக் கட்சிகள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

தெரிவுக் குழுவில் இருக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால், இச்சட்டவரைவை செழுமைப்படுத்த முடியுமென எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் சகல கட்சிகளையும் சார்ந்த சிங்களப் பெரும்பான்மை உறுப்பினர்கள், இவை திருத்தப்பட வேண்டும், செழுமைப் படுத்தப்பட வேண்டும் என்பதை சிறிதளவேனும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இந்நிலையில் இரண்டு வருடமாக பிரேமதாசா அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட மங்கள முனசிங்க தெரிவுக்குழுவிற்கு நடந்த கதியே மீண்டும் இதற்கும் ஏற்படும்.

அன்பிற்கினிய தமிழ் மக்களே,

அரசாங்கம் தமிழ் கட்சிகளுக்கிடையில் பிளவுகளை உண்டாக்கி, அதன் மூலம் ஒரு பகுதி தமிழ் கட்சிகளையாவது தன்னுடன் வைத்திருக்கவே விரும்புகின்றது. கடந்த 15 வருடமாக நாம் நடாத்திய போராட்டம், இதற்கான தியாகங்கள் எல்லாம் வீண் விரயமாகிப் போக நாம் அனுமதிக்கக் கூடாது. இன்னும்கூடக் காலம் கடந்து விடவில்லை. சகல தமிழ்க் கட்சிகளும் ஐக்கியப்பட்டால், இவர்களால் ஓர் அரைகுறைத் தீர்வை எங்கள் மேல் திணிக்க முடியாதென்பது மாத்திரமல்ல, நாம் விரும்பும் தீர்வையும் இவ்வரசாங்கம் கொண்டுவர நிர்ப்பந்திக்க முடியும்.ஆனால், மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்வோர், மக்களின் பிரச்சினைக்காக, அவர்களின் எதிர்காலத்திற்காக ஒன்றிணைவது என்பதை விடுத்து, இன்னும் தமது குறுகிய கட்சி அரசியலிலே கருத்தாய் இருப்பது விரும்பத் தக்கதல்ல.

கடந்த இரண்டு மாதகாலமாக ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ், புளொட், ரெலோ ஆகிய அமைப்புகள் பல தடவைகள் கூடிப்பேசி, அடிப்படை விடயங்களில் சில கருத்தொருமிப்புகளுக்கு வந்துள்ளன. இக் கட்சிகளுக்கிடையில் பல கருத்து வேறுபாடுகள் உண்டு. முரண்பாடுகள் உண்டு. ஆனாலும் கூட அவற்றை ஒதுக்கிவிட்டு, நாம் தொடர்ந்து பேசிவருகின்றோம் எனில், நிச்சயமாக, தமிழ் மக்களின் குரல் ஒருமித்து ஒலிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகவே.

எதிரி எங்களைப் பிரிப்பதிலும், எமது உரிமைகளை வலுவிழக்கச் செய்வதிலும் திட்டமிட்டுப் பணிபுரிகின்றான். இது தெரிந்தும்கூட நாம் அ[ர]னின் வலைக்குள் சிக்குவது எமக்கே அழிவை உண்டாக்கும்.

இன்று 4 கட்சிகள் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளில் அரசு சரியான தீர்வுகளை கொண்டு வரவேண்டுமென வற்புறுத்தத் தொடங்கியுள்ளன. இத்துடன் ஈ.பி.டி.பி., த.வி.கூட்டணி போன்ற கட்சிகளும் இணையும்பட்சத்தில் அரசாங்கம் எந்தவோர் அரைகுறைத் தீர்வையும் எம்மீது திணிக்க முடியாது.

ஆனால் இந்த ஐக்கியத்துக்கு முட்டுக்கட்டையாக கூட்டணி இருப்பது வருந்தத் தக்கது. மிகவும் நீண்டகால அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகள் எனவும், சட்ட வல்லுனர்கள், இராஜதந்திரிகள் என தம்மை அழைத்துக் கொள்ளும் இவர்கள் இன்றைய காலத்தின் தேவையை உணர்ந்து சகல கட்சிகளையும் ஐக்கியப்படுத்துவதை விடுத்து, - அதனை சீர்குலைக்க முயற்சிப்பது தமிழ் மக்களுக்கு செய்யும் பெரிய துரோகமாகும்.

50,000இற்கு மேற்பட்ட தமிழ் மக்களின் இழப்புக்களுக்குப் பின்னரும் அரசாங்கத்தின் கபட வேடங்களையும், துரோகத்தனங்களையும் உணர்ந்த பின்னரும் எமது கோரிக்கைகளை ஐக்கியப்பட்டு வலியுறுத்தாமல் ஒவ்வொரு பக்கமாக பிரிந்திருப்பது மிகவும் வெறுக்கத்தக்கது.

அன்பிற்கினிய தமிழ் மக்களே,

எமது பிரச்சினை வெறும் உள்நாட்டுப் பிரச்சினையல்ல. எமது பிரச்சினைகளை உலகம் முழுவதும் அக்குவேறு ஆணிவேறாகப் புரிந்து வைத்திருக்கின்றன. எமது கோரிக்கைகளுக்கு சர்வதேச ஆதரவும் மிகப் பெருமளவில் இருந்தது. ஆனால் புலிகளின் தூரப் பார்வையற்ற செயற்பாடும், ஆயுதங்களின் மேல் கொண்டிருந்த நம்பிக்கையும், அதனடிப்படையில் மட்டுமே அமைந்த அவர்களின் செயற்பாடுகளும், எமது போராட்டத்தை வெறும் பயங்கரவாதம் என்ற வட்டத்துக்குள் சுருக்கிவிட்டது என்பது உண்மை. ☞

“ இந்நிலையில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் இவை இன்னும் குறைக்கப்பட்டு, யானை தின்ற விளாம்பழம் போல வெளியில் கோதிருக்க உள்ளுக்கு ஒன்றும் இல்லை என்ற நிலையே இச்சட்ட நகலுக்கும் ஏற்படும். ”

# எங்கள் கோரிக்கைகள் நியாயமானவை
# இதற்கான தியாகங்களும் அர்த்தமுள்ளவை
# ஐக்கியப்பட்டு நின்றால் எங்கள் மீது
# அரைகுறைத் தீர்வை திணிக்க முடியாது



அன்பிற்கினிய தமிழ் மக்களே, கடந்த எமது பல கண்ணோட்டங்களில் வட-கிழக்கு இணைப்பை அரசு திட்டமிட்ட வகையில் பின்தள்ளி வருவதை நாம் சுட்டிக்காட்டி வந்துள்ளோம். இன்று அது உண்மை என வெட்டவெளிச்சமாகத் தெளிவாகியுள்ளது.

ஜனாதிபதி அவர்கள் தமது ஆலோசனைகளை வெளியிடும்பொழுது, இது இந்தியாவில் மாநிலங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களிலும் விட அதிகமானது, இது ஏறத்தாழ ஓர் சமஷ்டி அரசியலமைப்பு முறையை ஒத்தது என அரசாலும், தமிழர் விடுதலைக் கூட்டணியாலும் வியாக்கியானம் செய்யப்பட்டது.

“ எமது கோரிக்கைகளுக்கு சர்வதேச ஆதரவும் மிகப் பெருமளவில் இருந்தது. ஆனால் புலிகளின் தூரப் பார்வையற்ற செயற்பாடும், ஆயுதங்களின் மேல் கொண்டிருந்த நம்பிக்கையும், அதனடிப்படையில் மட்டுமே அமைந்த அவர்களின் செயற்பாடுகளும், எமது போராட்டத்தை வெறும் பயங்கரவாதம் என்ற வட்டத்துக்குள் சுருக்கிவிட்டது. ”

அன்பிற்கினிய தமிழ் மக்களே,

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றுதான் ஒரேஒரு வழியென சந்திரிகா அவர்கள் மீண்டும் மீண்டும் பிரகடனப்படுத்திருந்தாலும் கூட, அத்தீர்வு எத்தகையது என்பதில் ஜனாதிபதிக்கு சரியான தெளிவான கருத்தில்லை என்பதையே தீர்விற்கான அவரது ஆலோசனைகள் சுட்டிநிற்கின்றன.

இவ்வரசியல் சட்ட நகல் தயாரிப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் சேர்ந்தே ஈடுபட்டதாகத் தெரிய வருகின்றது. ஆனால், அவர்களும் கூட ஜனாதிபதியின் அரைகுறை தீர்விற்கு ஒத்துப் போகின்றார்கள் என்பதுடன் இத்தீர்வினையும் அவர்கள் நல்லது, வல்லது என்று வரவேற்பதுதான் வேடிக்கையாக உள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவர் ஆனந்தசங்கரி அவர்கள் பி.பி.சி.க்கும் பின்னர் கொழும்பு பத்திரிகைகளுக்கும் கொடுத்த பேட்டியில் இது மிகவும் சிறப்பான அதிகாரப் பகிர்வென்றே கூறியுள்ளார். இவர்கள் என்ன காரணத்திற்காக இவற்றை எல்லாம் ஆதரிக்கின்றார்கள் என்பது அவர்களுக்கே வெளிச்சம்.

இந்த அரைகுறை அரசியல் நகல்திட்டம் இனி பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டு, அங்கு அது அங்கீகரிக்கப்பட்டால், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டு, பின்னர் மக்களின் அங்கீகாரத்திற்காக அது சர்வஜன வாக்கெடுப்பையும் சந்திக்க வேண்டும்.

ஒருபுறத்தில் உண்மையாகவே இது ஓர் அரைகுறை அதிகாரப் பகிர்வாக இருக்கின்ற அதேசமயம் அரசில் அங்கம் வகிக்கும் டி.யு.என்.எஃப். போன்ற கட்சிகள் அதிகாரங்கள் இன்னும் குறைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி வருகின்றன. எதிர்க்கட்சியான யூ.என்.பி. யும் இதே கருத்துக்களையே கொண்டுள்ளது. இதனைவிட பாராளுமன்றத்திற்கு வெளியில் இருக்கக்கூடிய சிங்கள இனவெறியர்கள் அரசியல் தீர்வே கூடாதென்கின்றனர்.

இந்நிலையில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் இவை இன்னும் குறைக்கப்பட்டு, யானை தின்ற விளாம்பழம் போல வெளியில் கோதிருக்க உள்ளுக்கு ஒன்றும் இல்லை என்ற நிலையே இச்சட்ட நகலுக்கும் ஏற்படும். அதுமாத்திரமல்ல வடக்கு-கிழக்கு தமிழர்கள் தமது கலை, கலாச்சாரம் ...

“ மிகவும் நீண்டகால அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகள் எனவும், சட்ட வல்லுனர்கள், இராஜ தந்திரிகள் என தம்மை அழைத்துக் கொள்ளும் இவர்கள் இன்றைய காலத்தின் தேவையை உணர்ந்து சகல கட்சிகளையும் ஐக்கியப்படுத்துவதை விடுத்து, அதனை சீர்குலைக்க முயற்சிப்பது தமிழ் மக்களுக்கு செய்யும் பெரிய துரோகமாகும். ”

www.padippakam.com



# இலங்கையின் மாகாணசபைக் கலைப்புகளின் வரலாறு - ஒரு பார்வை



## ரோஹான் எதிரிசிங்க

கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட விரிவுரையாளரும் நாடறிந்த அரசியலமைப்பு சட்ட வல்லுனரும் மற்றும் அடிப்படை உரிமைகள் சட்ட வல்லுனருமான றோஹான் எதிரிசிங்க "மாகாண சபை கலைப்புகளும் அரசியற் திட்டமும்" என்ற தலைப்பில் ORGANISATION OF PROFESSIONAL ASSOCIATIONS நடத்திய பொதுக் கருத்தரங்கில் தை 6ம் திகதி ஆற்றிய உரையின் சாராம்சம்.

-நன்றி: "சண்டே ரைம்ஸ்" தை 21-96

கடந்த மாத ஆரம்பத்தில் இரண்டு மாகாணசபைகளைக் கலைத்ததானது பல பாரிய பிரச்சினைகளை எழுப்பியுள்ளது. இது தற்போதைய அதிகாரப் பகிர்வுத்திட்டத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நிலைமையைத் தோற்றுவித்துள்ளதுடன், அதிகாரப் பகிர்வு என்ற எண்ணக்கரு தொடர்பாக ஆழமாகச் சிந்திக்கத் தூண்டியும் உள்ளது.

இலங்கையில் மாகாண சபைகளைக் கலைத்த வரலாற்றை எவரேனும் திரும்பிப் பார்த்தால் கவனத்திலெடுக்க வேண்டிய சில முக்கிய விடயங்களை கண்டு கொள்ளலாம். இதற்கு நல்லதோர் முன்னுதாரணமாக வடக்கு-கிழக்கு மாகாணசபையை எடுத்துக் கொள்ளலாம்.

இம்மாகாணசபை 1988ம் ஆண்டு நவம்பர் மாதம் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஐச் சேர்ந்த முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தலைமையிலான கூட்டு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. தமது ஆட்சிக் காலத்திற்குள் 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் வெற்றிகாண வேண்டி இருந்தது.

மாகாணசபை முறையை நடைமுறைப் படுத்துவதில் தோல்வியுற்றால் அது புலிகளின் தவறான விளையாட்டுக்குச் சாதகமாக அமைந்து விடும் என்பதால் 13வது திருத்தச் சட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த வேண்டிய முக்கிய நிலையில் ஈ.பி.ஆர்.எல்.எப் கூட்டு அரசாங்கம் அன்று இருந்தது.

1988 மார்கழியில் ஜனாதிபதித் தேர்தல் நடந்ததாலும், 1989 மாசியில் பாராளுமன்றத் தேர்தல் நடந்ததாலும், பதவிக்கு வந்த சில மாதங்களில் பெரியளவில் எதனையும் செய்ய முடியவில்லை. அதன் பின்னர் முதலமைச்சர் அவர்கள் ஜனாதிபதியையும், ஏனைய அமைச்சர்களையும், அவர்களின் செயலாளர்களையும் சந்திப்பதற்கு பலதடவை கொழும்புக்கு விஜயம் செய்தார்.

ஆனால் மத்திய அரசில் இருந்த அதிகாரங்கள் மாகாணத்திற்கு போவதையோ, உண்மையான அதிகாரப்பகிர்வையோ அவர்கள் விரும்பவில்லை. ஆனால் அவர்கள் நிர்வாகப் பரவலாக்கலையும், சில அதிகாரிகளை மாகாணத்திற்கு விட்டுக் கொடுப்பதற்கும், அதன் நிர்வாகத்திற்கான அடிப்படை உபகரணங்களை சற்று மேலதிகமாகத்தரவுமே விரும்பினர்.

பிரேமதாசா நிர்வாகமானது ஆரம்பத்தில் இருந்தே அதிகாரப் பகிர்வு என்ற கொள்கைக்கு விரோதமாகவே செயற்பட்டு வந்தது. சிறிய ஓர் உதாரணத்தைக் குறிப்பிடலாம், "மாகாண அரசு" என்று கூறக்கூடாதென்றும், மாகாணசபை என்றே அழைக்கப்பட வேண்டும் என்பதிலும் பிரேமதாசாவும் அவர் அரசும் பிடிவாதமாக இருந்ததே அதிகாரப்பகிர்விற்கெதிரான அவர்களின் நிலைப்பாட்டைத் தெளிவாகக் காட்டும்.

சபை (Council) என்பது மாகாணத்தின் சட்டவாக்க பிரிவை மட்டுமே குறிக்கும். இது முரண்பாடானதாகும். அரசாங்கம் 13வது திருத்தச் சட்டத்தை (மாகாணசபை சட்டத்தை) நடைமுறைப்படுத்த பின்வாங்கியதால், அதனை நடைமுறைப்படுத்த உறுதியளித்த இந்திய அரசை நாட வேண்டிய தேவை ஈ.பி.ஆர்.எல்.எப். அரசுக்கு ஏற்பட்டதுடன், 13வது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்த மாகாண அரசு, தானாகவே குடிமக்கள் தொண்டர்படை (சி.வி.எப்.), மற்றும் அரசாங்க அதிபருக்கு சமமான நியமனங்களை செய்ய வேண்டி ஏற்பட்டது.

1989ம் ஆண்டு சித்திரை மாதம் ஜனாதிபதி பிரேமதாசா அவர்கள் புலிகளுடன் பேச்சு வார்த்தையை ஆரம்பித்து, இந்திய அமைதி காக்கும் படையை வெளியேறும்படி கோரினார். அதன் பின்னர் திரு. அமிர்தலிங்கமும் இன்னும் பல தலைவர்களும் புலிகளால் கொலை செய்யப்பட்டார்கள்.

இத்தகைய போக்கின் வளர்ச்சி இயற்கையாகவே ஈ.பி.ஆர்.எல்.எப். அரசாங்கத்தை எச்சரிக்கைக்குள்ளாக்கியது. இதனால் ஈ.பி.ஆர்.எல்.எப். அரசாங்கம் 19 அம்சக் கோரிக்கை ஒன்றை முன்வைத்து ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரியதுடன், தேர்தலைச் சந்திக்கும்வரை இடைக்கால அரசொன்றில் புலிகளுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளத் தயாராக இருப்பதாகவும் கூறியது. இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தேர்தலில் தோற்கடிக்கப்பட்டதும், அதனைத் தொடர்ந்து தமிழ் நாட்டு முதலமைச்சர் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக அங்கீகரிக்கக் கோரியதும், மேற்கண்ட முன் முயற்சிகளை சீர்குலைத்தது. இவ்வாறு தனிமைப் படுத்தப்பட்டு, விரக்திக்குள்ளாக்கப்பட்டு, அபாயத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எப். தலைமையிலான அரசு 1990 பங்குனி 1ம் திகதி அன்று மாகாணசபையில் ஓர் பிரேரணையை நிறைவேற்றியது. இதன் மூலம் மாகாணசபையானது "ஈழம் ஜனநாயகக் குடியரசு" ஒன்றிற்கான அரசியல் சாசனம் ஒன்றைத் தயாரிப்பதற்கான அரசியல் சாசன சபையாக அதை மாற்றி அமைக்கும்படி பிரகடனப்படுத்தியது. அத்துடன் 1991ம் ஆண்டு பங்குனி முதலாம்திகதிக்கு முன்னர் சிறிலங்கா அரசாங்கம் 19 அம்சக் கோரிக்கையை நிறைவு செய்யாவிடில் சுதந்திர ஈழத்தைப் பிரகடனம் செய்வதாகவும் அது அறிவித்தது.



முன்னாள் வட-கிழக்கு முதல்வர் வரதராஜப் பெருமாள்

விரக்தியின் விளிம்பிற்கு சென்ற பெருமாள் நிர்வாகத்தின் கடைசி முயற்சியாகவே இது இருந்தது என்பதுடன், பிரேமதாசா அரசுடன் பேச்சுவார்த்தையில் இருந்த புலிகளையும் ஓர் வெட்கக்கேடான நிலைக்கு தள்ளும் ஓர் பரிதாபகரமான முயற்சியாகவுமே இது இருந்தது. ஈழப்பிரகடனத்தை செய்த ஈ.பி.ஆர்.எல்.எப். அரசாங்கம் உடனடியாகவே நாட்டைவிட்டு வெளியேறி அயல்நாட்டில் தஞ்சம் அடைந்ததானது இதனை மிகவும் தெளிவாகக் காட்டுகின்றது.

வட-கிழக்கு மாகாண அரசின் குறுகிய ஆட்சிக் காலத்துக்குள் ஏற்பட்ட இம்மாறுதல்களில் இருந்து நாம் சரியான பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். அதிகாரப் பகிர்வென்பது பிரிவினைக்கு வழிவகுக்கும் என்பதோ, பிளவுபடுவதற்கான முயற்சியோ அல்ல. ஆனால், அதற்கு நேர் எதிர்மாறானது. ஈழப் பிரகடனம் என்பது உண்மையில் பிரிவினைக்கான முயற்சியல்ல. மாறாக 13வது திருத்தச் சட்டத்தை அமுல்நடத்த பிரேமதாசா அரசாங்கம் மறுத்ததும், அதிகாரப் பகிர்வை சரியான முறையில் கையளிக்காமையினாலும் ஏற்பட்ட விரக்தி மனப்பான்மையின் பிரதிபலிப்பே ஈழப்பிரகடனமாகும்.

இப்பிரகடனத்திற்கு மாகாணசபைகள் சட்டம் 1990ம் ஆண்டு ஆடிமாதம் கொண்டு வந்த 27வது திருத்தத்தின் மூலம் பிரேமதாசா அரசாங்கம் பதிலளித்தது.

இந்தச் சட்டமூலத்தின் மூலம் ஒரு மாகாணசபையின் அரைவாசிக்கு மேற்பட்ட மாகாணசபை உறுப்பினர்கள் அரசியல் சாசனத்துக்கு கீழ்ப்படிய மறுத்தால், இல்லையேல் அரசியல் சாசனத்தின் கீழ் எடுத்த சத்தியப் பிரமாணத்துக்கு முரணாக நடந்தால், அல்லது மாகாண அரசு தனது செயற்பாட்டை இழந்தால், மாகாண சபை கலைக்கப்பட்டதாக கருதப்படும். இவ்விடயத்தை ஆளுநர் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தினால் போதுமானது. இதனடிப்படையில் மாகாண அரசு கலைக்கப்படலாம்.

அதிகாரப் பகிர்வு என்ற எண்ணக் கருத்து என்பது பகிர்ந்தளிக்கப்பட்ட துறைகள் தொடர்பாக, சுயமான முடிவுகளை எடுத்துச் செயற்படுத்தல் என்ற அடிப்படைக் கொள்கையிலிருந்தே எழுகின்றது. சமஷ்டி அமைப்போ, அல்லது ஓரளவு சமஷ்டி அமைப்போ, எவ்வகையிலேனும் அதிகாரப்பகிர்வு முறையைக் கொண்ட பெரும்பாலான நாடுகளில் அச் சமஷ்டி அமைப்புகள் தமக்கு நெருக்கடி வரும்வேளையில் மத்திய அரசு தலையிடுவதற்கு அதிகாரமளிக்கின்றன.

எனினும் துஷ்பிரயோகம் செய்யப்படாமலிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான பதில் சரத்துக்களையும் உள்ளடக்கியிருக்கும். பெரும்பாலும் எந்தெந்தச் சூழ்நிலைகளில் தலையிடலாம், எந்த வகையில் தலையிடலாம் என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். 13வது திருத்தச் சட்டப்படிகூட மத்திய அரசு மாகாண அரசு நடவடிக்கையில் தலையிடலாம். அத்தகைய சந்தர்ப்பங்களாவன:

1. நிர்வாகம் சீர்குலைந்துபோகும் நிலைமை ஏற்படும் சந்தர்ப்பம்.
2. நாட்டில் நிதி நெருக்கடி ஏற்படும்போது, அல்லது மாகாணத்தில் நிதி நெருக்கடி ஏற்படும் சந்தர்ப்பம்.

இச்சந்தர்ப்பங்களில் கூட மாகாணசபை ஜனாதிபதியினால் கலைக்கப்பட முடியாது. ஒன்றில் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படும் அல்லது அசாதாரண நிதி நெருக்கடி வரும் பட்சத்தில் ஆளுநருக்கு வழிகாட்டல்கள் வழங்கப்படும்.

---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் நாம் வெறும் பிரிவினைவாதிகள் அல்ல. தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக நிற்கின்றோம் என்பதை சர்வதேச சமூகத்துக்கு புரிய வைத்தால் நிச்சயமாக எமது முழுமையான உரிமைகளை எம்மால் வென்றெடுக்க முடியும்.

இதற்கு அடிப்படைத் தேவை தமிழ்க் கட்சிகளுக்கிடையில் ஐக்கியமே. சமாதானம், அமைதி, அரசியல்தீர்வு என பேசும் அரசாங்கம், அவற்றைக் கைவிட்டு, அரைகுறைத் தீர்வையே முன்வைக்கின்றார்கள் என்பதை நாம் முழுச் சர்வதேச சமூகத்துக்கும் புரிய வைக்க வேண்டும்.

நாம் எல்லோருமே, சந்திரிகா முற்போக்கானவர். அவரின் அரசின் கீழ் இப்பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படுமென்றே எதிர்பார்த்தோம். ஆனால் அவரும் கூட சிங்கள இனவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் போன பின்னர்.... எமது கோரிக்கைகளை வென்றெடுக்க எம்மால் ஆன அனைத்து முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

வெளியிடப்பட்டுள்ள அரசியல் நகல்திட்டம் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் செழுமைப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்கும் அதே சமயம், முழுமையான தீர்வொன்றை உருவாக்கும்பொருட்டு இந்த அரசின் மேல் சர்வதேச நிர்ப்பந்தத்தை உருவாக்கவும் நாம் முயற்சிக்க வேண்டும்.

புலிகளின் நடவடிக்கைகள் இங்கும், சர்வதேச ரீதியிலும் எமது போராட்டத்தை மிகவும் பலவீனப்படுத்தியுள்ளது. அதுமாத்திரமல்ல, அவர்களது முன்யோசனையற்ற நடவடிக்கைகளே சந்திரிகா அரசாங்கத்திற்கு சர்வதேச ஆதரவையும் தேடிக் கொடுத்தது. இந்நிலையில் மீண்டும் எமது கோரிக்கைகளுக்காக சர்வதேச ஆதரவை வென்றெடுக்க வேண்டும்.

எமது நியாயமான கோரிக்கைகள் சிறீலங்கா அரசால் நிராகரிக்கப்படுவதை வெளியுலகுக்கு விளங்க வைக்க வேண்டும்.

ஒருபக்கம் சமாதானம் பேசும் இவ்வரசு, மறுபக்கத்தில் யுத்தத்தில் குறியாய் இருப்பதுடன், தமிழ் மக்களின் கோரிக்கைகளை கொச்சைப் படுத்தி, அதனை வெறும் சலுகைகள் என்ற வடிவில் அணுகுவதையும் நாம் விளங்க வைக்க வேண்டும்.

எமது நியாயமான கோரிக்கைகளுக்காக சகல தமிழ்க் கட்சிகளும், ஐக்கியப்படுவதை வலியுறுத்தும் அதேசமயம், எமது நியாயமான கோரிக்கைகளுக்காக மக்கள் முழுமையாக குரல் கொடுக்க வேண்டும். இராணுவக் கெடுபிடிகள், அவசரகாலச்சட்டம், என்பவற்றுக்கு பயந்தொதுங்காமல், எமது கோரிக்கைகளுக்காக நாம் எமது ஜனநாயகப் போராட்டங்களை ஆரம்பிக்க வேண்டும்.

இதேசமயம், வெளிநாட்டில் இருக்கக் கூடிய தமிழ் மக்களும், யதார்த்த சூழ்நிலைகளை உணர்ந்து எமது மக்களின் கோரிக்கைகளுக்காக பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டும். புலிகளைப் பலப்படுத்தவோ, புலிகளை அங்கீகரிக்கும்படி கோருவதோ எந்த நாட்டிலும் ஏற்றுக்கொள்ளப்படப் போவதில்லை. ஆனால் நிச்சயமாக நியாயமான எமது கோரிக்கைகளை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கும் என்பதை வெளிநாட்டுத் தமிழ் மக்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்ட நிலையில் தமிழ் மக்கள் மீது எதனையும் திணிக்கலாம் என இவ்வரசாங்கம் நினைப்பதை நாம் மாற்றி அமைக்க வேண்டும். புலிகளும் கூட மக்களின் இன்றைய கஷ்ட நிலைமை, அவர்களின் மனோநிலை என்பவற்றைப் புரிந்துகொண்டு சரியான கோரிக்கைகளுக்காக ஒன்றுபட வேண்டும். இவற்றை சரியாக சிந்தித்து தீர்க்கமான முடிவுகளுடன் ஐக்கியப்பட்டுச் செயற்படாவிட்டால், வரலாறு எம்மை மன்னிக்காது.

இப்படிக்கு,
உங்கள் தோழன்
சுரேஷ் பிரேமச்சந்திரன்

---



"காங்கிரஸ் - கறையான் அரித்த பஞ்சாங்கம், கரு இல்லாத முட்டை.
தி.மு.க., ம.தி.மு.க. - உருட்டிப் போட்டால் போண்டா. தட்டிப் போட்டால் வடை.
தமிழ் நாட்டில் ஆண்டவனையே காப்பாற்றிக் கொண்டிருப்பவர் ஜெயலலிதாதான்."
- தமிழ் நாட்டின் முன்னாள் அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து.

படிப்பகம்

www.padippakam.com



# அரசு + புலிகள் + தமிழ் பா.உ. க்கள் = சிக்கலில் மக்கள்

அரசு + புலிகள் + தமிழ் பா.உ. க்கள் = சிக்கலில் மக்கள்
அரசு + புலிகள் + தமிழ் பா.உ. க்கள் = சிக்கலில் மக்கள்

## தீர்வைச் செழுமைப்படுத்த தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையே வழி

-சாரதி



கடந்தகால யூ.என்.பி. கட்சி ஆட்சியில் இனப்பிரச்சினை என்பது வெறுமனே அரசியல் சதுரங்க விளையாட்டுக்காயாகவே பாவிக்கப்பட்டு வந்தது. தமிழ் பேசும் மக்களின் உரிமைகள், அபிலாசைகள் என்பனவற்றை தமது ஆட்சி அதிகாரத்துக்கு சாதகமாகவே பாவித்து வந்தனர். இந்நிலையில் ஆட்சிப் பொறுப்பை சந்திரிகா அரசு ஏற்றுக் கொண்டபோது தமிழ் பேசும் மக்களிடத்தில் ஓர் எதிர்பார்ப்பு காணப்பட்டது.

அதேவேளை 'சிங்கள அரசியல்வாதிகள் எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான், இவர்கள் யாருமே தமிழ் பேசும் மக்களின் உரிமைப் பிரச்சினைகளை தீர்த்து வைக்க மாட்டார்கள்' என்ற தொடர்ச்சியான சிந்தனையும் தமிழ் மக்களில் ஒரு சாராரிடம் மாற்றமடையாமல் இருந்தது. இது கடந்தகால கசப்பான அனுபவங்களின் வெளிப்பாடு என்பது ஒரு யதார்த்தமான உண்மை.

இருப்பினும் இந்நாட்டில் அமைதி, சமாதானம் நிலவ, பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட, இன ஐக்கியம் வளர... அர்த்தமற்ற இந்த யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என பெரும்பான்மையான சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் சந்திரிகா குமாரதுங்கவுக்கு வாக்களித்து ஜனாதிபதியாக்கினர்.

ஆபிரிக்க கறுப்பின மக்களுக்கு ஒரு கிளார்க் போல, பாலதீன மக்களுக்கு ஒரு ராபின் போல, இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு சந்திரிகா என்ற எதிர்பார்ப்பும் காணப்பட்டது.



ஆனால் அண்மையில் நடைபெறும் சம்பவங்கள் மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறும் கதையாகத்தான் இருக்கிறது. இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு சந்திரிகா அரசால் முன்வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகளை, பௌத்த சிங்களப் பேரினவாதிகள் தமது வசதிகளுக்கேற்ப மாற்றியமைக்க ஆலோசனைகளை வாரி வழங்கி வருகிறார்கள்.

இவர்களைக் காரணம் காட்டி இந்த ஆலோசனைகளில் இன்னும் அதிகமாக பேரினவாதக் கலப்பு ஏற்படுமாயின், அது நாட்டை மீண்டும் தவறான பாதைக்கே இட்டுச் செல்லும். முன்வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் இன்னும் செழுமைப்படுத்தப்பட வேண்டுமே தவிர, இனப்பிரச்சினையை குழப்பி அடிக்கும் விதத்தில் சிக்கலாக்கப்படக் கூடாது. இதனால் நாடு இன்னும் பல இரத்தக் களரிகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

இந்த நாட்டில் அமைதி, சமாதானம் என்பது முழுமையான அரசியல் தீர்வு ஒன்றை இதயசுத்தியுடன் நடைமுறைப்படுத்துவதன் மூலமே தோற்றுவிக்க முடியும் என்ற உண்மையை மூடிமறைத்து விட்டு, அரசியல் சுயலாபங்களுக்காக எடுக்கப்படும் முடிவுகள் ஆபத்தில் தள்ளிவிடும்.

### தமிழ் பேசும் மக்களுக்கு ஏன் இந்த நிலை?

தமிழ் பேசும் மக்கள் பல இனக்கலவரங்களின் இன்னல்களைச் சந்தித்திருந்தாலும் ஆயுதப் போராட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட புலிகளின் தவறான அணுகுமுறைகளினால் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வந்துள்ளார்கள். இதன் உச்சக்கட்டமாக புலிகளின் அரசியல் வறுமையால் ஏற்பட்ட தான்தோன்றித்தனமான நடவடிக்கையினால் குடாநாட்டு மக்கள் ஒட்டுமொத்தமாக சொந்த இடங்களைவிட்டு குடிபெயர்ந்திருக்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

சந்திரிகா அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை புலிகள் தமது அரசியல் ஆற்றாமையின் காரணமாக ஒருதலைப்பட்சமாக மீறினர். தமிழீழத்துக்கு மாற்றாக முன்வைக்கப்படும் மாற்று யோசனைகளை தாம் பரிசீலிக்கத் தயார் என்று தெரிவித்த புலிகள், சந்திரிகாவின் ஆலோசனைகளை முற்றாகவே நிராகரித்தனர்.

பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வை செழுமைப்படுத்துவதில், விட்டுக்கொடுப்புகளின் மூலம் தமிழ் பேசும் மக்களின் அதிகபட்ச உரிமைகளைப் பெற்றுக்கொண்டு, அதிலிருந்து உரிமைகளை பூரணமாகப் பெறுவதை நோக்கி முன்னேறுதல் என்பதில் நம்பிக்கை இழந்த புலிகள் தாமாகவே யுத்தத்தை தொடங்கினர்.

தமது பலத்தை அளவுக்கதிகமாகப் பிரச்சாரப்படுத்தி மக்களை மாயைக்குள் வைத்திருந்த புலிகளின் நடவடிக்கைகள் இராணுவத்துக்கு முகம்கொடுக்க முடியாமல் புஷ்வாணமாகிப் போனது ஏன்?

தாம் மட்டும்தான் தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த தலைவர்கள் என்று கூறி ஏனைய இயக்கங்களை, கட்சிகளை தடைசெய்து, அவற்றின் தலைவர்களை, உறுப்பினர்களை, கல்விமான்களை கொன்று குவித்ததே இன்றைய பின்னடைவுக்கு காரணம்.

மக்களின் எழுத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் எல்லாவற்றையும் பறித்தெடுத்து அவர்களின் சகஜ வாழ்க்கையை தொலைத்து, உண்பதற்கு மட்டும் வாய் திறக்கும் நிலையை துப்பாக்கி மூலம் உருவாக்கிய சர்வாதிகாரப் போக்கே இன்றைய பின்னடைவுக்குகாரணம்.

தமக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்கள், மாற்று இயக்கத்தினர், துரோகிகள் என்று ஆயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள், பெண்கள், வயோதிபர்களை பிடித்து சித்திரவதை முகாம்களில் வைத்து சித்திரவதை செய்து கொன்று குவித்து வருகின்றனர். தமது இயக்கத்துக்குள்ளேயே தமக்கு எதிரானவர்கள் என்று காரணம் காட்டி நூற்றுக்கணக்கானவர்களை கொன்று குவித்துள்ளனர்.

இப்படி எந்த மக்களின் விடுதலைக்காக போராடுகிறோம் என்று சொல்கிறார்களோ அந்த சொந்த மக்கள்மீதே புலிகள் கொலைவெறி ஆடிவருவதே இன்றைய பின்னடைவுக்கு காரணம்.

குடாநாட்டில் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வந்த முஸ்லீம் மக்களை இரவோடிரவாக துரத்தியடித்து, கிழக்கில் தமிழ் முஸ்லீம் கலவரங்களை தமது தேவைக்கேற்ப தூண்டிவிட்ட புலிகள், இன்று தமது கேடயமாக மக்களை கிளிநொச்சிக்கும், மன்னாருக்கும் என்று இழுத்துக் கொண்டலையும் சுயநல நோக்கே இன்றைய பின்னடைவுக்கு காரணம்.

அரசு கொடுத்து வந்த புனர்வாழ்வுப் பொருட்களையும், ஊழியர்களின் ஊதியங்களையும் வைத்துக்கொண்டு, தாம் தமிழீழ நிர்வாகம் நடத்திவருவதாக கூறி தமது உறுப்பினர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் சுகபோக வாழ்க்கையை ஏற்படுத்திய மாயத்தோற்றமே இன்றைய பின்னடைவுக்கு காரணம்.

### உலகக் குரல் கேட்காததேன்?

ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் ஓரிரு இரவுகளில் உடுத்த உடைகளுடன் தெருவில் ஒருமித்து இறங்கி சொந்த பந்தங்களை தொலைத்து, நெரிசலில் உயிர்துறந்து, மரங்களின் கீழ் உறங்கி, தெருவோரங்களில் பிரசவித்து, நாட்கணக்கில், வாரக்கணக்கில், மாதக்கணக்கில், உண்ண உணவின்றி, உடுக்க மாற்றுடையின்றி, குளிக்க, இயற்கை உபாதையைக் கழிக்க இடவசதி, தண்ணீர் வசதி இன்றி தொற்று நோய்களுடன் தொடரும் இந்தப் பரிதாப வாழ்க்கைக்காக உலக நாடுகளின் கண்டனக் குரல் கேட்காததேன்?

1987இல் வடமராட்சியில் இராணுவம் மேற்கொண்ட லிபரேசன் ஒப்பறேசன் நடவடிக்கையை இந்நிலையில் ஒருமுறை திரும்பிப் பார்ப்பது நல்லது. இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஒருசில தினங்களிலேயே இந்தியா கண்டனக்குரல் கொடுத்தது, தொடர்ந்து மக்களுக்கு விமானமூலம் உணவுப் பொட்டலங்களைப் போட்டது. இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டது.

ஆனால் இந்தியாவினை எதிர்த்துக் கொண்ட புலிகள், அதன் உச்சக் கட்டமாக ராஜீவ்காந்தியை கொலை செய்ததன் மூலம் இந்திய அரசின், இந்திய மக்களின் வெறுப்பை ஏற்படுத்திக் கொண்டனர். அத்தோடு தமிழ் பேசும் மக்களுக்காக அமைதி ஏற்படுத்த வந்த அமைதிப்படையையும் இலங்கை அரசுடன் கைகோர்த்துக் கொண்டு திருப்பி அனுப்பினர். அதன் விளைவு தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினையில் இந்தியா கைகழுவிக் கொண்டது.

இன்று மாதக்கணக்கில் மக்கள் தொடர்ச்சியாக இன்னல்களை அனுபவிக்கும்போதும் இந்தியா தனது தலையை நீட்டி மீண்டும் குட்டு வாங்கத் தயாரில்லை என்று ஒதுங்கிக் கொண்டது. உபகண்டத்தில் இந்தியாவின் குரல் தமிழ் பேசும் மக்களுக்காக ஒலிக்காததால் உலகநாடுகளின் கண்டனக் குரல் ஒலிக்கவில்லை என்னும் கசப்பான உண்மையை நாம் ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டும்.

பூகோள ரீதியிலும், உறவினடிப்படையிலும் தமிழ் பேசும் மக்களுக்கு இந்தியாவின் பங்களிப்பு அவசியமானது என்பதனை புலிகளின் ஆதரவாளர்களும், இந்திய எதிர்ப்புவாதிகளும் (இந்திய ஆக்கிரமிப்பு என்று கூக்குரலிடும் புத்திஜீவிகளும்) சற்றுசிந்திப்பது தமிழ் பேசும் மக்களின் எதிர்கால நலனுக்கு நல்லது.




புலிகளின் தொடர்ச்சியான சிங்கள மக்கள் மீதான படுகொலைகள் உலகநாடுகளில் அவர்களை பயங்கரவாதிகள் என்ற நிலையில் பார்க்க வைத்திருக்கிறது. அதனால் சந்திரிகாவின் புலிகளுக்கெதிரான நடவடிக்கை உலகில் நியாயப்படுத்தப்பட்டிருக்கிறது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட மாகாண அரசின் சிவில் நிர்வாகத்தை புலிகள் குழப்பாமல் விட்டிருந்தால், மாகாண அரசின் தொண்டர்படையை

---

## நண்பனுக்கு

அலைகள் துள்ளி விளையாடும் கடல்,
கரையடைத்துப் பெருகும் நதி நீர்,
முகில்களை விரட்டும் காற்று,
இவை போலவேதான் நானும், எனினும்
எனக்குச் சொந்தமானதில்லையென் கால்கள்.
கயிற்றின் நுனியில் இழுபடும் கால்களுக்குத்
திசையை நிர்ணயிக்கச் சுதந்திரம் ஏது?
நிணம் சிதறிய பாதைகளில் நடக்க நேர்கையில்
சிசுக்களின் சிரசுகள் மீது பாதம் பதிகையில்,
கதறியழும் என்
இதயத்திற்குச் சொல்வேன்,
நீ மட்டும் என்னோடிரு,
என்றேனும், என் கால்கள் பிணைக்கப்பட்ட
கயிறுகளை ஆட்டுவிக்கும்
விரல்களை நான் அறுத்தெறிவேன்,
அன்று என் பாதங்களின்
ஒவ்வொரு அடி வைப்பும்,
உன் சொற்படியாயிருக்கும்,
இப்புவி என் வசமாயிருக்கும்.

- தேவிபாரதி

படிப்பகம்

www.padippakam.com



மத்திய அரசின் துணையுடன் அழிக்காமல், மாகாண பொலிஸ் அமைப்பைத் தாக்காமல் இருந்திருந்தால் இன்றைய அரசியல் ஆலோசனைகளில் குழப்பமான பலவற்றை சந்திரிகா அரசு முன்வைக்க முடியாமல் போயிருக்கும். இந்த ஆலோசனைகளை செழுமைப்படுத்த ஒரு பலமான அமைப்பாக மாகாண அரசு விளங்கி இருக்கும்.

இதனால் இன்றைய சிங்களப் பேரின வாதிகளின் கூச்சல்கள் அர்த்தமற்றவையாகிப் போயிருக்கும். இவர்களின் கூக்குரல்களை காரணம்காட்டி சந்திரிகா மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று சொல்லும் நிலையும் ஏற்பட்டிருக்காது. அரசியல் வறுமை கொண்ட புலிகளின் வங்குரோத்து எண்ணங்களால்தான் இன்றைய பலவீனமான நிலை ஏற்பட்டுள்ளது.

அரசியல் பலமோ, ஆயுதபலமோ அற்ற புலிகளால் குழப்பங்களை, அமைதியற்ற நிலையை தொடர்ச்சியாக ஏற்படுத்த முடியுமே தவிர ஒரு அரசியல் தீர்வை, அமைதியை நோக்கி முன்னேற முடியாது என்பதுதான் உண்மை நிலையாகும்.

## இராணுவ நடவடிக்கை ஏன்?

இன்று மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்றப் பாய்ச்சல், சூரியக்கதிர் போன்ற தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளின் நோக்கம் என்ன?

புலிகள் ஒப்பந்தத்தை மீறினார்கள், ஆகவே அவர்களுக்கெதிரான நடவடிக்கை; இது தமிழ் பேசும்மக்களுக்கு எதிராக அல்ல என்று அரசு தரப்பில் சொல்லப்படுகின்றது. இதன் நோக்கம் புலிகளைப் பலவீனப்படுத்தி பேச்சுவார்த்தைக்கு அழைப்பது என்பதாக அர்த்தப்பட்டுள்ளது.

கடந்தகால அனுபவங்களிலிருந்து பார்க்கும்போது புலிகள் ஜனநாயக வழியை ஏற்றுக் கொள்வார்கள், பேச்சுவார்த்தையை இதயசுத்தியுடன் நடாத்துவார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஏனெனில் அவர்கள் அதற்கான அசைவுகளை எங்கேயும் காட்டவில்லை.

ஒன்றில் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வரமாட்டார்கள் அல்லது இதயசுத்தியுடன் கலந்து கொள்ளாது குழப்பி அடிப்பார்கள். இந்த உண்மை நிலை வெறும் கற்பனை அல்ல, கடந்த கால அனுபவங்கள்! அப்படிப் பார்க்கும்போது சந்திரிகா அரசின் எண்ணம் நிறைவேறுமா? அப்படி இல்லையாயின் இந் நடவடிக்கை மக்களுக்கெதிரானதே.

ஏனெனில் மக்களே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். புலிகள் தாம் குடாநாட்டை மீண்டும் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கில் பேச்சுவார்த்தைக்கு வந்தால் மீண்டும் பழைய பல்லவிதான். மீண்டும் இராணுவ நடவடிக்கை, மீண்டும் சிக்கலில் மக்கள்.... ஆக, இந்நடவடிக்கை புலிகளுக்கெதிரானதா? மக்களுக்கெதிரானதா?

இன்றைய அரசு பாராளுமன்றத்தில் கம்பியில் நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே யாழ்ப்பாணத்தை இதுவரை யாரும் கைப்பற்றவில்லை நாம் கைப்பற்றியிருக்கிறோம் என்ற மறைமுகமான இனவெறிப் பிரச்சாரத்திற்கு இந்த இராணுவ நடவடிக்கையை பாவித்து சிங்கள மக்களின் உணர்வுகளை தமக்கு சாதகமாகப் பாவித்து, தேர்தலை நடாத்தி பாராளுமன்றப் பலத்தை அதிகரிக்கும் சுய நல லாப நோக்கில் பயன்படுத்தப்படுமாயின் இது பல பின்விளைவுகளை தோற்றுவிக்கும்.

இந் நடவடிக்கை புலிகளைப் பலவீனப் படுத்த என அர்த்தப்படுத்தப்படும்போது அரச கொடி யாழ்ப்பாணத்தில் ஏற்றுவது என்பதில் ஏன் இத்தனை சல்லாரிப்புகள், விளம்பரங்கள்? இவை பல சந்தேகக் கேள்விகளை எழுப்புகின்றன. இன்றைய அவசர தேவை கொடி ஏற்றுவதல்ல. நாதியற்று சொந்த மண்ணிலேயே அகதிகளாகிப் போயிருக்கும் குடாநாட்டு மக்களுக்கு புனர்வாழ்வளிப்பது, அவர்களை புலிகளின் பிடியில் இருந்து விடுவிப்பதுதான்.

## சிக்கலுக்குள் மக்கள்

கிளிநொச்சிக்குள் முடங்கிப் போயிருக்கும் இலட்சக்கணக்கான மக்களை அவர்களின் பழைய இடங்களில் மீளக் குடியமர்த்தும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவார்களா என்ற கேள்வி எழ வாய்ப்புண்டு. இலங்கை இராணுத்தின் கடந்தகால கொடுமைகள், புலிகளின் தாக்குதல்களுக்கு எதிராக இராணுவம் மேற்கொள்ளும் மக்கள் படுகொலைகள் இவை எல்லாம் மீளக் குடியமர மக்களுக்கு பயப் பீதியை உண்டுபண்ணுகின்றன.

அரச அலுவலர்களையும், ஓய்வூதியம் பெறுவோரையும் யாழ்ப்பாணத்தில் வந்து ஊதியங்களை பெற்றுக்கொள்ளுமாறு அரசு வலியுறுத்தினால், அனலிடைப் புழுவாய்த் துடிக்கும் மக்கள் ஊதியம் பெறுவதைச் சாட்டி வரவே விரும்புவர். ஆனால் மக்களுள் கலந்துகொண்டிருந்து குழப்பங்களை விளைவிக்கும் புலிகளின் கேடயமே மக்கள்தான். ஆகவே, புலிகள் மக்களை விடுவார்களா? பசிவந்தால் பத்தும் பறந்திடும் என்ற நிலையில் மக்கள் எத்தனை நாட்களுக்கு புலிகளின் துப்பாக்கிகளுக்கு பயப்படப் போகிறார்கள்?

தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தீவுப் பகுதிகளில் இராணுவம் சிவில் நிர்வாகத்தை ஈ.பி.டி.பி.யிடம் விட்டிருக்கிறது. இது யூ.என்.பி.யின் தாரைவார்ப்பாயினும் இன்றைய அரசின் பாராளுமன்ற பலத்துக்கு ஈ.பி.டி.பி. ஆதரவு தேவைப்படுவதால் தீவுப்பகுதியில் அரசு கண்டும்காணாததுமாய் இருக்க அங்கு மற்றும் ஓர் தமிழ் இராணுவ சர்வாதிகார ஆட்சி நடைபெறுகிறது.

இந்நிலை இன்று கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் இடம்பெறுமா என்ற சந்தேகமும் மக்கள் மனதில் உள்ளது. அப்படி ஒன்று இடம்பெற்றால் எண்ணெயிலிருந்து தப்பி நெருப்பில் விழுந்த கதையாகத்தான் இருக்கும். தவறான அணுகுமுறைகளால் கொலை கலாச்சாரம் நடைமுறையாக்கப்பட்டு எல்லோராலும் விரட்டப்பட்டு விரட்டப்பட்டு ஓடி ஓடி வாழ்க்கையின் ஓரத்துக்கே ஓடிவிட்ட மக்கள் மிகவும் நொந்து களைத்துப்போய் உள்ளார்கள். மனிதமற்ற மண்ணில் அவர்கள் ஜீவன் நெட்டுயிர்க்கிறது. சிக்கலில் இருக்கும் மக்களுக்கு இன்று தேவையானது எல்லாம் நிம்மதிப் பெருமூச்சுவிட சுதந்திரம்.

மக்கள் இல்லாத மண்ணை நாம் நேசிக்கவில்லை மக்களுக்காகவே மண்ணை நேசிக்கிறோம் என்று தோழர் பத்மநாபா அவர்கள் கூறினார்கள். இன்று மக்களும் இல்லை. மண்ணும் இல்லை, மானுடநேயமும் இல்லை என்றாகிவிட்டது. இந்தப் பரிதாப நிலைக்கு புலிகளே பொறுப்பேற்க வேண்டும்.



## தமிழ் எம்.பி. க்கள் கடமை என்ன?

புலிகளிடம் ஜனநாயகமில்லாமல் இருக்கலாம்; அவர்களுக்கு மக்கள் மீது அக்கறை இல்லாமல் இருக்கலாம். ஆனால் மக்களிடம் வாக்குக் கேட்டு வென்று, ஜனநாயக மன்றமான பாராளுமன்றம் போன தமிழ் பாராளுமன்றஉறுப்பினர்கள் மக்களை மறந்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டிருப்பது நியாயத்தின்பாற்பட்டதல்ல. இவர்களுக்கு ஒரு வரலாற்றுக்கடமை இருக்கிறது. அது இன்றைய அரசியல் தீர்வு ஆலோசனைகளை ஒன்றுசேர்ந்து நின்று செழுமைப்படுத்துவது.

எல்லோருமே தனித்தனியே ஒற்றுமை வேண்டும் என்று சொல்லி மற்றவர்களை பிழை சாட்டிக்கொண்டு தப்பிவிட முடியாது. அரசியல் ஆலோசனைகளை செழுமைப்படுத்துவது, அகதிகளாகிப் போயுள்ள மக்களுக்கான புனர்வாழ்வு வேலைகளைத் துரிதப்படுத்துமாறு அரசை ஒன்றுசேர்ந்து வற்புறுத்துவது...... இவற்றையாவது ஒன்றுசேர்ந்து செய்ய முன்வராது ஒருவரில் ஒருவர் குற்றம் கண்டுபிடித்து முட்டையில் மயிர் பிடுங்கிக் கொண்டிருப்பது அரசியல் பேசப் புறப்பட்டவர்களின் அரசியல் வறுமையா என்று சந்தேகிக்கத் தூண்டுகிறது.

எவனொருவன் தான் குற்றமற்றவன் என்று கூறுகிறானோ அவன் முதல்கல்லை எறியட்டும் என்று யேசுநாதர் கூறியது போல் இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களில் முதல் கல் எறிய யார் தயார்? தங்கள் பல்லைக் குத்தித் தாமே மணக்கும் போக்குகளை விட்டு தமிழ் பேசும் மக்களின் நலன்களின் அடிப்படையில் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டிய அவசியம் இவர்களுக்கு உள்ளது.

இராணுவ நடவடிக்கையை அரசு தான் தோன்றித்தனமாகச் செய்ய புலிகளின் பலவீனமே காரணம். அதுபோல் அரசியல்தீர்வு ஆலோசனைகளை அரசு, தான் நினைத்தபடி செய்து முடிக்க தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒற்றுமையற்ற பலவீனமே காரணமாகிவிடக் கூடாது.

மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வை செழுமைப்படுத்த தமிழ்கட்சிகள் சரியான திசைவழியில் நடந்தால்தான் புலிகளை அந்நியப்படுத்த முடியும். மக்களுக்கு விமோசனம் கிடைக்கும்.

# வடக்கிலிருந்து.... வடக்கிலிருந்து.... வடக்கிலிருந்து.... வடக்கிலிருந்து....

சென்ற மாதம் சிறீலங்கா அரசையும், சிறீலங்கா அரசுக்குத் துணைபோகும் இந்தியாவையும் கண்டித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றினை நடாத்த புலிகள் மக்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்கள். மாவீரர் குடும்பத்தினர் கூட அழைப்பை அலட்சியம் செய்து விட்டனர். திட்டமிட்டபடி மக்கள் சேராததினால் அன்றைய ஆர்ப்பாட்டத்தை ஒத்தி வைத்தனர் புலிகள். பின்னர் வீடுவீடாகச் சென்று 'ஊர்வலத்துக்கு வராமல் விடுபவர்களுக்கு கொடுப்பனவுகள் நிறுத்தப்படும்' என அறிவித்தனர். அடுத்த நாள் ஆர்ப்பாட்டத்திற்குப் பெருமளவு மக்கள் சென்றனர். ஆர்ப்பாட்ட முடிவில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், தமிழக முதல்வர் ஜெயலலிதா, இலங்கை ஜனாதிபதி சந்திரிகா ஆகியோரது கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

இது ஒருபுறமிருக்க, 'தமிழீழ தேசிய விடுதலைப் போருக்கு தொடர்ந்து துணைதரவு தாரீர்' என்று தலைப்பிட்டு தமிழகத் தலைவர்களுக்கும், தமிழக மக்களுக்கும் புலிகளின் தலைவர் பிரபாகரன் விடுத்திருக்கும் நீண்ட செய்தியிலிருந்து ஒரு பகுதி பின்வருமாறு....

சிங்கள இனவாத ஆட்சியாளரின் கொடுமையால், இன அழிப்பின் விளிம்பில் நின்று, விடுதலைக்காகப் போராடி வரும் ஈழத்தமிழினத்திற்காக உணர்வு பூர்வமாக உரிமைக்குரல் எழுப்பும் தமிழக மக்களுக்கும், தமிழகத் தலைவர்களுக்கும் எமது மக்களின் சார்பில் அன்பையும் நன்றியையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஈழத்தமிழருக்கு இன்னல் நிகழும் பொழுதெல்லாம் தமிழகத்திலிருந்து எழும் அனுதாப உணர்வலைகள், ஈவிரக்கமற்ற எமது எதிரிக்கு ஒரு அச்சுறுத்தலாக அமைவதுடன், நொந்து போயிருக்கும் எமது மக்களுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறது. அத்துடன் ஈழத்தமிழினம் நிராதரவாக தனித்து நிற்கவில்லை என்ற உண்மையையும் உலகத்திற்கு எடுத்து இயம்புகின்றது. தமிழீழ மக்களின் இனப்பிரச்சினை பற்றியும், அந்தப் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தும் விடுதலைப் புலிகள் பற்றியும் தவறான கருத்துக்களை தமிழக மக்கள் மனதில் விதைத்துவிட எத்தனை சக்திகள் எத்தனித்த போதும், அரசியலுக்கு அப்பால் நின்று இன உணர்வின் அடிப்படையில், எமது மக்களுக்காக நீதி கேட்டு தமிழகம் ஆர்ப்பரித்து எழுவதை காண எமக்கு ஊக்கமும் உறுதியும் ஏற்படுகின்றது.....

.... தமிழர் தாயகத்தின் புவியியல் தனித்துவத்தையும் ஒருமைப்பாட்டையும் சீர்குலைத்து, தமிழரின் தேசிய வாழ்வை சிதறடிப்பதில் சந்திரிகா அரசு புதிய வரலாற்று சாதனைகளைப் புரிந்து வருகிறது. சமாதானத்திற்கான போர் என்றும், தமிழரை விடுதலை செய்யும் படையெடுப்பு என்றும் உலகத்தின் கண்களில் மண் தூவிவிட்டுஎமது வரலாற்று தாயகத்தை ஆக்கிரமித்து வருகிறது. சந்திரிகா அரசின் தீர்வுத் திட்டமும் தமிழர் தாயகத்தின் புவியியல் கட்டமைப்பை மாற்றியமைப்பதையே அடிப்படை அம்சமாகக் கொண்டது.....

..... நீண்ட காலமாக வீரம் செறிந்த ஒருவிடுதலைப் போராட்டத்தை நடத்திவரும் தமிழினம் சமர்களில் பின்னடைவுகளைக் கண்டு சளைத்துப் போவதில்லை. சாவும், அழிவும், இடம்பெயர்வும், அகதி வாழ்வுமாக பெரும் துன்ப பளுக்களை சுமந்து நின்றபோதும் எமது மக்கள் உறுதி தளரவில்லை. நாம் விடுதலையில் பற்றுக்கொண்டு ஒன்றுபட்டு உறுதிகொண்டு நிற்கிறோம். இன்றைய பின்னடைவுகளை நாளைய வெற்றிகளாக மாற்றிவிட நாம் திடசங்கற்பம் பூண்டு நிற்கிறோம். இன்று ரத்தம் வழிந்தோடும் எமது மண், நாளை, ஒரு சுதந்திர பூமியாக மாறும் என்ற அசையாத நம்பிக்கை எமக்குண்டு.....

படிப்பகம்

www.padippakam.com



# மக்கள் இதயங்களை வெல்ல இதுவல்ல வழி



யாழிலிருந்து வவுனியா வரும் பயணிகள் அனுபவிக்கும் துன்பங்கள் சொல்லும் தரமன்று.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ் மக்கள் முடிவிலாப் பயணம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். ஆனால் அவர்கள் தொடர்ந்து சூனியங்க ளைத்தான் கண்டுகொண்டிருக்கிறார்கள்.

பல்வேறு சிரமங்கள் கெடுபிடிகளுக்கு மத்தியில் அவர்கள் புலிகளிடம் பாஸ் பெறுகிறார்கள். பலர் வயோதிபத் தாய் தந்தையர், பெண்டு பிள்ளைகளை பிணை யாக வைத்தே பாஸ் பெறுகிறார்கள். இளவயதுக்காரர்கள் என்றால் 25 ஆயிரம் ருபாவிலிருந்து லட்ச ருபாவரை தானம் செய்துவிட்டுத்தான் பாஸ் பெறமுடியும். எல்லா மனிதர்களும் அங்கு பண்டமாக மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

புலிகள் சொந்த இடங்களைவிட்டு எழும்பச் சொன்னால் எழும்பிவிட வேண்டும்; பணம் கட்டச்சொன்னால் கட்டிவிட வேண்டும்; புலியாக இணையச் சொன்னால் இணைந்துவிட வேண்டும்; மறுபேச்சுப் பேசினால் விளைவு விபரீதமாக இருக்கும். இந்த சூழ்நிலையில் பாஸ் பெற்று தாண்டிக்குளம் தாண்டு பவர்கள் நம்பிக்கை தரும் விடயங்கள் எதனையும் பார்க்க முடியவில்லை.

சோதனை என்ற பெயரில் நடைபெறும் வசவுகளையும், சோதனை என்றபெயரில் பெண்கள்மீது நடைபெறும் அங்கசேஷ்டை களையும் தாண்டியாக வேண்டும். மொழிபுரியாதவர்கள்-அப்பாவிகள்தான் பெரும்பாலும் இத்தகைய துரதிருஷ்ட நிலைக்கு ஆளாகுபவர்கள்.

தாண்டிக்குளத்தில் நிற்கும் சீருடையணிந்தோர் அகதிகளான மக்களை வரவேற்கும் தோரணையில் நடந்து கொள்வதில்லை. விரோதிகளின் கையாட்களைப் பார்ப்பது போலவே இவர்கள் சாதாரண தமிழ் மக்களைப் பார்க்கிறார்கள். இந்த லட்சணத்தில் இவர்கள் நாட்டின் ஐக்கியத்தையும் இறைமையையும் பாதுகாக்கிறார்கள் என்று அரச மற்றும் தனியார் தொலைக்காட்சி வானொலிச் சேவைகள் அல்லும்பகலும் அலறுகின்றன. மக்களின் இதயங்களையும் மனதையும் வெல்ல வேண்டும் என்று சொல்லும் அரசு, அதற்கான சிறு அறிகுறியையேனும் காட்டவில்லை.

தாண்டிக்குளம் சோதனைச் சாவடிக்கு அண்மையிலுள்ள பாடசாலை ஒன்றில் அரைநாளோ ஒருநாளோ தங்கவைக்கப் படும் மக்கள், வவுனியா நகரிலிருந்து மன்னார் வீதியில் 2 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வேப்பங்குளம் முகாமுக்குக் கொண்டு செல்லப்படு கிறார்கள். (இது ஒரு பழைய களஞ்சியம், பின்னர் அகதிமுகாம், திரும்ப இராணுவ முகாம்). அங்கு பெயர் விபரங்கள் பதிவு செய்யப்பட்டு, அடையாள அட்டைகள் வாங்கப்படுகின்றன. அங்கு பயணிகள் 3 நாட்களுக்குத் தங்கவைக்கப்படுகிறார்கள்.

வவுனியாவில் உறவினர்கள், நண்பர் களிடம் செல்பவர்கள் சம்பந்தப்பட்ட உறவினருடன் தொடர்புகொண்டு அவர், தான் சம்பந்தப்பட்டவரை ஏற்றுச் செல்வதாகக் கூறும் கடிதம் எழுதி, தனது பிரதேச கிராமசேவையாளரிடமும் கடிதம் பெற்று முகாமிற்கு வந்து இவற்றைச் சமர்பித்து சம்பந்தப்பட்டவரை அழைத்துச் செல்லலாம்.

முகாம் பொலிஸ், சம்பந்தப்பட்டவருக்கு ஒருநாள் 'பாஸ்'தான் வழங்கும். அந்தப் 'பாஸ்' புதுப்பிப்பதானால் கிராம சேவையாளரின் கடிதத்துடன் திரும்பவும் யாழ்ப்பாணம் கொழும்பு வீதியிலுள்ள- வவுனியா நகரிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பிறவுன் கம்பனி என்ற பாஸ் வழங்கும் இடத்தில் பாஸ் புதுப் பித்துக் கொள்ள வேண்டும். இந்தப் பாஸ் பிரச்சினை வவுனியாவின் நாளாந்தக் கடமைகளில் ஒன்றாகிவிட்டது.

வேப்பங்குளத்திற்கு கொண்டு வரப்பட்ட, பிற இடங்களுக்குச் செல்ல வேண்டிய வர்கள் (கொழும்பு, மற்றும் கிழக்கு மாகாணம், புத்தளம், மலையகம்...) மூன்று நாட்களின் பின் வவுனியா ரயில் நிலையத்திற்கண்மையிலுள்ள இன்னு மொரு தற்காலிக முகாமிற்குக் கொண்டு வரப்படுகிறார்கள். இங்கு வைத்து இராணுவத்தினரே வெளியிடங்களுக்குச் செல்வதற்கான இறுதி அனுமதியை வழங்குகிறார்கள்.

50 வயதுக்கு மேற்பட்டவர்கள் கொழும்பு செல்வதானால் ஓரளவு கருணை காட்டப் படுகிறது. அதற்குக் கீழ்ப்பட்டவர்களாயின் கொழும்பில் பொலிஸ் பதிவிலுள்ள அவரது உறவினரோ நண்பரோ அப்பதிவினையும், தான் அவர்களைப் பொறுப்பேற்று அழைத்துச் செல்வதாக கடிதம் ஒன்றும் எழுதிக் கொடுத்துவிட்டு அழைத்துச் செல்லலாம். அதுவும் இரண்டு நாட்கள் அந்த முகாமிலும் தரித்திருக்க வேண்டும்.

கடும் சுக்வீனமுற்றோர், அரச ஊழியர், பல்கலைக்கழக மாணவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டும் பட்சத்தில் அவர்களும் பிரயாணம் செய்யலாம்.

வவுனியாவில் நாளாந்தம் பாஸ் புதுப்பிப் பவர்களும், பிற இடங்களுக்குச் செல்பவர் களும் ரயில் நிலையத்திலுள்ள இராணு வத்திடம் அனுமதி பெற வேண்டும்.

மக்கள் இத்தகைய நடவடிக்கைகளினால் மிகவும் மனம் புண்பட்டுப் போயுள்ளனர். ஏன் இவ்வாறு நடத்துகிறார்கள் என்ற கேள்வியின் ரேகைகளே அவர்களின் முகங்களில் காணப்படுகிறது.

தற்காலிக முகாம்களில் மக்கள் தமது தனித்துவத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. சில நேரங்களில் ரயில் நிலையத்திற்கருகாமையிலுள்ள முகாம் நிரம்பி வழிந்து மரங்களின் கீழும் படுத்துறங்க வேண்டிய நிலை இப் பயணிகளுக்கு ஏற்படுகிறது.

வவுனியா கச்சேரி- உணவு, சுகாதார வசதி மற்றும் அத்தியாவசிய சேவைகளை மேற்கொண்டாலும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் பிரயாணிகளின் தொகைக்கேற்ப சேவைகளை வழங்க முடியவில்லை.

★ புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் நாளாந்த உணவுக்கென ஒருவருக்கு தை முதல் திகதியிலிருந்து 45ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

★ வைத்திய மற்றும் சுகாதார சேவை களை வவுனியா ஆதார வைத்தியசாலை, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியன வழங்குகின்றன.

ஆனால் பிரயாணிகளாக வரும் மக்கள் இந்த வசதிகளைப் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. ஏனெனில், அவர்கள் கற்பனை செய்யமுடியாத அவல அனுபவங்களைப் பார்த்து விட்டார்கள். ஆனால் அவர்கள் தமது அவசர தேவைக்கான பயணம் இடைநடுவில் இழுபடுவதையிட்டுத்தான் அங்கலாய்க்கிறார்கள். சிலர் திரும்பிச் சென்ற சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

உண்மையில் மக்கள் படும் இத்தகைய துன்பங்களுக்கு புலிகளைக் குற்றஞ் சாட்டாமலும் விட முடியாது. அவர்கள் சனத்தோடு சனமாக மனித வெடிகுண்டு களையும், தமது பயங்கரவாதத் தாக்கு தலுக்கான ஆட்களையும் அனுப்பி வைக்கிறார்கள் என்பது பகிரங்க இரகசியம். ஏற்கனவே கொழும்புக்கோ வேறு இடங்களுக்கோ சென்ற பலர் தாம் கொடுத்த விலாசங்களில் இருந்து தலைமறைவாகியுள்ளார்கள்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் ஒரு வடிகட்டல் தேவைப்படுகிறது. அதனை மேற்கொள்வது அரசின் கடமை என்பது புரிந்துகொள்ளக் கூடியது. ஆனால் இத்தகைய நடவடிக்கைகள் ஆயிரக் கணக்கான அப்பாவிச் சிவிலியன்களைப் பாதிக்கக்கூடாது.


உதாரணமாக பிரயாணிகளின் தரங்களைப் பார்ப்போம்:

★ கடுமையாக நோய்வாய்ப்பட்டு சத்திர சிகிச்சை போன்றவற்றிற்காக செல்வோர்.
★ வெளிநாடு செல்வதற்கான சகல ஆவணங்களையும் வைத்திருப்போர்.
★ தொழில் நிமித்தம் வெளியிடங் களுக்குச் செல்வோர்.
★ பிறஇடங்களிலிருந்து தொழில்நிமித்தம் வடக்கிற்குச் சென்று திரும்புவோர். உதாரணம்: மட்டுநகர் கிராமங்களிலி ருந்து அருவி வெட்டச் சென்று திரும்பிய விவசாயிகள். அரச ஊழியர்கள் வேலைத் தள அடையாள அட்டை இருந்தால் இலகுவாகப் பிரயாணம் செய்யலாம். இந்த ஏழை விவசாயிகள் தொழில் நிமித்தம் தான் வடக்கிற்குச் சென்றவர்கள். ஆனால் இவர்களிடம் வேலைத்தள அடையாள அட்டை இல்லை. கிராமப் புறத்து அப்பாவிகள் இவர்கள். இத்தகை யோர் பிரயாணம் செய்வதில் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள்.
★ தமது பிள்ளைகளிடம் பணம் பெறுவதற்கென கொழும்பு செல்வோர்.
★ வயோதிபர்கள்.
★ பல்கலைக்கழக மாணவர்கள். குறிப்பு: பல்கலைக்கழக விரிவுரைகள் ஆரம்பித்த பின்னரும் சிலர் இந்த முகாம் களில் காவல் இருக்கிறார்கள்.
★ நேர்முகப்பரீட்சை மற்றும் பரீட்சைகள் நிமித்தம் செல்லும் மாணவர்கள்.
★ இடமாற்றம் மற்றும் தொழில் நிமித்தம் செல்பவர்கள்.
★ வேறு தொழில் ரீதியான காரணங் களுக்காகச் செல்வோர்.

இவர்கள் எல்லோரும் இதில் அடங்குவர்.

இவர்கள் அனுபவிக்கும் சிரமங்கள், அரசின் மீதான பாரிய அதிருப்தியை உருவாக்கும் என்பதனை ஏனோ அரசு புரிந்து கொள்கிறதாய் இல்லை.

அதைவிட சட்டம் ஒழுங்குக்குப் பொறுப் பானவர்கள், சிவில் அதிகாரிகள், ஊழியர்கள் மேற்கொள்ள வேண்டிய காரியங்களை இங்கு இராணுவத்தினரே மேற்கொள்கின்றனர்.




இதனால், மற்ற சகல நிர்வாக அமைப்புக் களில் வேலை செய்பவர்களைவிட, இராணுவத்தினர் நம்பகத்தன்மையான வர்கள்-கூடிய அதிகாரம் கொண்டவர்கள் என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் துறையினரும், சிவில் துறை யினரும் சமாந்தரமாகவே வேலை செய்ய முடியும். அல்லாவிடில், தற்போதைய முறைகள் பாரதூரமான ஆபத்தான பரிணாமத்தை எய்தலாம். இத்தகைய இராணுவ முதன்மைக் கையாளுகை இலங்கையில் ஜனநாயகநிறுவனங்களையே கேள்விக்குள்ளாக்கலாம்.

அரசு கைப்பற்றியுள்ள யாழ்ப்பாணத்தில் எதிர்காலத்தில் யாருடைய அதிகாரம் இருக்கப்போகிறது என்பதற்கு கட்டியம் கூறுவதாக உள்ளது. இது புலிகளினால் உருவாக்கப்பட்ட சர்வாதிகார அமைப்புக்குப் பிரதியீடாக இன்னுமொரு சர்வாதிகார அமைப்பை உருவாக்குவதை ஒத்த செயலாகவே அமையும்.

புதிய மொந்தையில் கழைய கள் என்ற பாணியில் நடைபெறுவதாக எண்ணத் தோன்றுகிற, அரசின் இவ்வாறான நட வடிக்கைகள் தமிழ் மக்களை வெகுவாக அந்நியப்படுத்திவிடும் நடவடிக்கை களாகவே அமையும்.

எனவே அரசு கூறிய, மக்களின் இதயங்க ளையும் மனங்களையும் வெல்லும் நடவடிக்கையை வெறும் வாய்ப் பந்தலாக அல்லாமல் நடைமுறையில் செய்ய முயல வேண்டும்.



**- ரி. சிறீதரன்**

www.padippakam.com



# போடியாரும் ஹாஜியாரும்



"போடியார்... போடியாரே...."

"இந்தா செல்லம்..... கடப்பில இருந்து ஆரோ கூப்பிடறாப்போல இரிக்கி, ஆரண்ட்டு பாரன்"

"கொஞ்சம் சும்மா இரிக்க உடமாண்டீங் களே.... ஆராது.... அட, நம்மட ஹாஜியாரு... வாங்க ஹாஜியாரு வாங்க.... இங்க.... இங்க வந்து பாருங்கவன் ஆரு வந்திரிக்கவெண்டு"

"ஆரு வந்திரிக்கா செல்லம்....அட, கரடி பொறயக் கண்டமாதிரி.... ஹாஜியார், வாங்க ஹாஜியார் வாங்க... பொறகு எப்படிப் பாடுகள் எல்லாம்..... ஊட்டுள எல்லாரும் சுகமா இரிக்காங்களா...."

"சுகத்துக்கென்ன போடியார், எல்லாரும் சொகமாத்தான் இரிக்காக..."

"என்னது, வந்த மனுசன இரிக்கச் செல் லாம நித்தாட்டி வெச்சி கதைக்கிரிங்க...."

"கண்டு கனகாலமில்லியா.... ஆளப் பாத்தாப் போல எல்லாத்தையும் மறந்திட்டன்... ஆ.... இரிங்க ஹாஜியார்..."

"ஓ....ஓ.... இரிப்பம்.... இரிப்பம்.... பொறகு செல்மாக்கா சொகமா இரிக்கிங்களா"

"சொகத்துக்கென்ன ஹாஜியார்..... செல்லம்..... ஹாஜியார் வேர்த்து விறுவிறுத்து வந்திரிக்கார். நல்லா.... மோராகக் கலந்து கொண்டு வாவன்...."

"பொறகு போடியார்.... நான் ரெண்டு மூண்டு வருசத்துக்கு முந்தி டவுனுக்கு வந்தாப்போல இரிந்த மாதிரித்தான் இப்பவும் டவுன் இரிக்கி. ஒரு மாற்றம் கீற்றத்தையும் காணலே வாப்பா...."

"ஆரு ஹாஜியார் இதையெல்லாம் பாக் கிற...."

"ஏன் உங்கட எம்பிமாருங்க இதையெல் லாம் பாக்கிறல்லையா...."

"நீங்க ஒண்டு..... அவங்களுக்கு எங்க காசியார் பொது நலத்தையும், பொது மக்களையும் பாக்க நேரமிரிக்கு..... ஒண்டு..... உலகத்த ஒரு ரவுண்டு அடிப்பாங்க. பொறகு தங்கட இன சனத்துக்கு வேலையக் கீலய வாங்கிக் கொடுப்பாங்க....."

"சும்மா சொல்லப்போடா போடியார்... எங்கட எம்பிமாருங்க துறைமுகம் எண்டும் யூனிவசெட்டியெண்டும் பெரிய பெரிய இசுக் கூலுகள் எண்டும் அம்பார மாவட்டத்தில நல்லாச் செய்யிறாங்க போடியார்...."

"அங்கதான் இரிக்கி காசியார் விசயம். ஒங்கட எம்பிமாருக ஒங்கட சனத்துக்கு ஒழைக்காங்க.... எங்கட மட்டக்களப்பு எம்பி மாருக அவகட இன சன சொந்தக்காரங்க ளுக்கு ஒழைக்காங்க...."

"நான் தெரியாமத்தான் கேக்கிறன் போடியார் அரசாங்கத்தில எங்கட காங்கிரஸ் எம்பிமாருக நாலஞ்சு பேர்தான் இரிக்காக, உங்கட கூட்டணி எம்பிமாரும் நாலஞ்சு பேரு இரிக்காக..... அப்ப பின்ன எங்கட எம்பிமாரு அரசாங்கத்தக் கேட்டு எங்கட ஊருக்குச் செய்யிற மாதிரி ஏன் பின்ன உங் கட கூட்டணி எம்பிமாரும் ஏன் அரசாங்கத் திட்டக் கேட்டுச் செய்யேலாது.... இதையும் உட கூட்டணி சந்திரிகாக்குத்தானே சப் போட்டுச் செய்யுறாங்க.... அடிச்சிக் கேக்க லாந்தானே"

"சும்மா செல்லப்போடா காசியார், எங்கட கூட்டணி எம்பிமார் அரசாங்கத்த அடிச்சிக் கேட்டு செல வேலைகளும் செஞ்சிருங்கா தெரியுமா"

"அதென்ன வேலகள் போடியார்"

"அஞ்சாறு சாராயத் தவறணைகளை வாங்கித் தந்திரிக்காங்க.... தங்கட மாமன் மச்சினன்மாருக்கு பெரிய பெரிய கொன் ரைக்ட்டுகள் எடுத்துக் கொடுத்திரிங்காங்க... இதுகள் எங்கட மட்டக்களப்புக்கு காணாதா காசியார்...."

"என்ற அல்லாவே.... இப்பிடியும் செய் வாகளா...?"

"செய்யாம..... செய்திருக்காங்களே காசியார்"

"இஞ்ச பாருங்க போடியார்... நான் கல் முனையில இருந்து விடிய ஆறுமணிக்குப் பொறப்பட்ட நான்.... இந்தா பன்னெண்டு மணிக்குத்தான் வந்து சேந்திரிக்கன்"

"என்னெடாப்பா செஞ்ச இவ்வளவு நேரத்துக்கும்...."

"இப்ப, மட்டக்களப்புக்கு வாரெண்டால் காடு மேடு எல்லாம் ஏறி இறங்கித்தான் வந்து சேரணும்...."

"ஏண்டாப்பா...."

"றோட்டு முழுக்க கம்பி அடிச்சி பஸ் கார் லொறிகள் சனங்கள் அதால போகாம கேம்ப்காரங்க தடை செஞ்சில்லுவா இருக் காக...."

"அப்ப எப்பிடி வந்திங்க காசியார்?"

"அதுதானே சென்னன் போடியார்..... காடு மேடு எல்லாம் சுத்தி வந்தனெண்டு.... இல்ல சும்மாதான் கேட்கன்..... போடியார், இதையாவது ஒங்கட எம்பிமாருங்க கேட்கிற இடத்தில கேட்டுச் செய்யிறத்தச் செய்யே லாதா...."

"ஏன் செய்யேலாம.... பேப்பரில மட்டும் நீட்டி முழக்கி அறிக்கையெல்லாம் உர்ராங் களே... அது காணாதா...."

"அப்ப இவக ஒண்டும் செய்யுறல்லையா போடியார்...?"

"எண்ட விசரக் கிளப்பாதெங்க காசியார்... நல்லா வேலைகள் செய்யிற ஆட்களையும் நேர்மையான அதிகாரிகளையும் தங்கட செல் லக் கேக்காட்டி உடனே மாத்திப் போடுவாங் க..... இதெல்லாம் நாட்டுக்கு நல்லமில்லை யா....?"

"எண்ட வாப்பா.... இதெல்லாம் நீங்க ஏனெண்டு கேட்டுப் பாக்கிறல்லையா?"

"ஒண்டு ரெண்டு பேரு ஏன்னென்டு கேட்டா, ஆமிட்ட ரகசியமாகச் செல்லி, ஏன் னெண்டு கேக்கிறவன் 'புலி' எண்டு பொடிச்சி உள்ளுக்க போட்டிருவாங்க...."

"எண்ட அல்லாவே.... இதுக்கு என்ன செய்யிற போடியார்?"

"என்ன செய்யுறதா.... காசியார், இவங்க ளுக்கு ஓட்டுப் போட்ட சனத்துக்கு, செருப் பால நாலு சாத்துச் சாத்தணும்.... அப்பான் நல்ல புத்திவந்து இனியாவது நல்லா பாத்து செரியான சனத்தோட சனமா நிக்கிற ஆக்க ளப் பாத்து ஓட்டுப் போடுவாங்க...."


"செரியாச் சென்னீங்க போடியார்.... அப்ப பின்ன நான் வரட்டா...."

"என்ன காசியார்..... விசர்க் கத கதைக் கிறீங்க.... எவ்வளவு காலத்துக்குப் பொறகு வந்திரிக்கீங்க.... சாப்பிடாமப் போறதா.... சும்மா கதய ஓட்டுப் போட்டு சாப்பிட்டுத்தான் போக ணும்"

"சாப்பிடாம மட்டும் போக உடமாட்டீங் களே...."

– மட்டக்களப்பான்

# குறுக்கெழுத்துப் போட்டி-20



## இடமிருந்து வலம்

1. கிழக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக்குதல்.
5. நிலமெனும் ஏட்டில் நெடுவான் மேகங்கள் நீர்கொண்டு எழுதிய கவிதை வரி. (தலைகீழ்)
7. பிரபல தமிழ் நாவல் ஒன்றின் பெயர்.
9. நிலத்திற்குள் அமைப்பது.
12. இலக்கியங்களில் தலைவன் பிரிவால் தலைவி உடலில் காண்கிற நோய். (தலைகீழ்)
13. கட்டில் படுக்கை.
14. தோழி.
16. எதனோடும் கலக்காத சுத்த நிலையில் இது வைரம். (தலைகீழ்)
17. தலைமுடி. (தலைகீழ்)
18. ஒருவருக்கு காட்டும் அல்லது ஏற்பட்ட மதிப்பு.
20. மிகவும் கடினமான வித்தையை குறிப்பிடுவது.
22. அண்ணனுக்கு இளையவன். (தலைகீழ்)
23. ஆண்டுதோறும் இறந்தவர் நினைவுச் சடங்கு.
24. வனம். (தலைகீழ்)
27. அணிகலன்களில் பதிக்கும் கல். மு.எ. இல்லை.
28. கடலில் வாழும் பாலூட்டி விலங்கு.
31. ஒருமைக்கு எதிர்.
32. பார்வதி. (தலைகீழ்)
33. "விள்க்கிலே -- நன்கு சமைந்தது மேவுவீர் இங்கு தீக்கொண்டு தோழரே"

## மேலிருந்து கீழ்

1. மேலோட்டமாகத் தெரியாத நுட்பம்.
2. கோள்.
3. மாட்டின் கழிவு. கடையெழுத்தின்றி.(தலைகீழ்)
4. நாம். (தலைகீழ்)
5. அன்றாடம்.
6. நம்பிக்கைக்கு உரியது.
8. மீனை உள்ளே பிடிக்கும்; நுளம்பை வெளியே தடுக்கும்.
10. இன்பம் தருவது.
11. குழுஉக்குறி. (குழம்பி)
14. வரலாறு.
15. பிறர் நலனுக்காகத் தன் சொந்த நலனை/ தன்னை இழக்கத் துணிபவர். (தலைகீழ்)
18. பள்ளிவாசல்.
19. பத்தினி. (தலைகீழ்)
21. இந்திய மொழிகளில் ஒன்று. (தலைகீழ்)
22. உருவச் சிலை.
25. தாயாகவும் நோயாகவும்.
26. இருப்பிடம் இழந்தவர்.
29. நீ அவல் கொண்டு வா, நான் இது கொண்டு வருகிறேன். இருவரும் ஊதி ஊதித் தின்ன லாம். (தலைகீழ்)
30. அதிகாலைக்கு முதலெழுத்தில்லை.

## கு.எ.போட்டி-19 விடைகள்:

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. நூற்றாண்டு | 1. நூல்நிலையம் |
| 4. மாதிரி | 2. (இ) றாத்தல் |
| 7. பேனாநண்பர் | 3. கோயம்பேடு |
| 9. நிவேதனம் | 4. மாநகரம் |
| 11. கண(ம்) | 5. திண்ணம் |
| 12. தில்லை | 6. பரி |
| 13. (இ) யந்திரம் | 8. பார் |
| 16. அகோரம் | 10. வேதி |
| 17. பதி | 14. திரவியம் |
| 19. வசனம் | 15. பந்து |
| 22. பாதுகை | 16. அவசரம் |
| 23. ஆஞ்சநேயர் | 18. திகைப்பு |
| 26. சரசம் | 20. ஆன |
| 27. அம்பு | 21. சஞ்சயன் |
| 29. மதியம் | 24. நேச(ம்) |
| 31. சகடை | 25. தாமரை |
| 32. தாசன் | 27. அகல 28. கசம் |
| 33. அலுவலகம் | 30. சதி 31. வடை |

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

**வ. பரந்தாமன்**
**பிரதான வீதி,**
**திருகோணமலை.**

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப் பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:**

1. வி. யாழினி, 104, பாங்ஷோல் வீதி, கொழும்பு-11.
2. ஞா. கலாந்தன், குட்செட் றோட், வவுனியா.
3. நிர்மலா இரகுநாதன், மட்டக்களப்பு.
4. வீ. சபாரத்தினம், காலி வீதி, கொழும்பு-06.
5. ம. அகல்ஜன், மன்னார் வீதி, வவுனியா.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 20ந் திகதிக்கு முன் அனுப்பிவையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு.**

# அமைதியை பலி கொண்ட அரசியல் படுகொலை

....புலிகள் நிஜமாகவே பேச்சுவார்த்தை களை விரும்புகிறார்களா? பேச்சுவார்த்தை குறித்து எந்த முயற்சியும் மேற்கொள்ளும் முன்னர் சந்திரிகா இதை அறிந்து உறுதிப் படுத்திக் கொள்வது நல்லது. ஏனெனில் மக்கள் பங்குகொள்ளும் ஒரு ஆட்சிமுறை யை வட இலங்கையில் ஏற்படுத்த முயற்சிக் கும் போதெல்லாம், வெளிப்படையாக அதை வரவேற்று பேச்சுவார்த்தைக்கு முன் வருவது போல புலிகள் நடந்து கொண் டாலும், உள்ளூர அதை முறியடிப்பதற் கான முயற்சிகளைச் செய்தே வந்திருக்கி றார்கள் என்பதுதான் வரலாறு.

இந்திய-இலங்கை ஒப்பந்தம், தமிழ் பகுதி களில் இந்திய மாநிலங்களில் உள்ளதைப் போன்ற ஒரு மக்களாட்சி அமைப்பை ஏற் படுத்த வழி செய்தது. ஆயுதக் கடத்தலில் ஈடுபடுவதில்லை, ஆயுதங்களை ஒப்படைக் கிறோம் என்று இந்தியாவுக்குக் கொடுத்தி ருந்த வாக்குறுதிகளை புலிகள் வேண்டு மென்றே மீறி, இந்திய இலங்கை ஒப்பந்தத் தை முறிக்கும் முதல் நடவடிக்கைகளை எடுத்தார்கள். சமீபத்திய அமைதிப் பேச்சு வார்த்தைகள் துவங்குவதற்கு முன்புகூட ராணுவத்தின்மீது தாக்குதல் நடத்தி, அதை எரிச்சலூட்டினார்கள். அதையும் மீறி பேச்சு வார்த்தைகள் தொடர இருந்தபோது படு கொலை நடந்துவிட்டது.

படுகொலை நடந்த சூழ்நிலையைக் கருத் தில் கொள்ள வேண்டும். திங்கட்கிழமை காலை பேச்சுவார்த்தை துவங்க இருந்தது. ஞாயிறு நள்ளிரவு படுகொலை நடந்துள் ளது. புலிகள்தான் இந்தப் படுகொலையைச் செய்தார்கள் என்பது நிரூபிக்கப்படவில்லை. ஆயினும் அவர்கள்மீது சந்தேகம் கொள்வ தற்கு நிறையக் காரணங்கள் இருக்கின்றன.

பேச்சுவார்த்தைக்கு இடைஞ்சல் செய்வதில் புலிகளுக்கு என்ன லாபம்? பேச்சுவார்த்தை யின் மூலம் யாழ்ப்பாணத்தில் ஒரு மக்க ளாட்சி அமைப்பு ஏற்பட்டால் தமிழர்கள் தானே பலனடைவார்கள்? தமிழர்கள் பல னடைவார்கள் என்பது உண்மைதான். ஆனால் மக்களாட்சி ஏற்பட்டால், தட்டிக் கேட்க முடியாத நிலையில் ஆயுதங்களின் துணைகொண்டு அதிகாரம் செலுத்தி வரு கிற ஒருசில தனிநபர்களின் நலன் பாதிக் கப்படும். அவர்கள் கையில் இருக்கும் அதிகாரம் பறிபோய் அது மக்கள் கைக்கு வந்துவிடும்.

ஒவ்வொருமுறை பேச்சுவார்த்தை தடைப் படுவதற்கு இந்த தன்னலம் காரணமாக இருக்கக்கூடுமோ?

– மாலன்

29.10.94 தினமணி (இந்தியா)

படிப்பகம்



# வடக்கு கிழக்கு யுத்தம்-1996

# பிரபாகரனை வெல்ல முடியுமா?

1995 ஒக்டோபரில் நடந்து முடிந்த யாழ் குடாநாட்டு யுத்தத்தின் பலாபலன்கள், இந்த ஆண்டில் தமிழ் மக்களுக்கும் அவர்களது அரசியல் தீர்வுக்கும் ஒரு வடிகாலாக அமையுமா, அல்லது தீர்வு கிட்டாமல் இராணுவ முஸ்தீபுகளும் யுத்தமும் தொடருமா என்பது இன்று எழும் கேள்விகளாகும். இந்தக் கேள்விக்கு என்ன பதில் என்று சம்பந்தப்பட்டவர்களை (அரசையும் புலிகளையும்) தேடிக் கண்டுபிடித்து மூர்ச்சை அடைவதைவிட இன்று வட-கிழக்கில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அரசியல் இராணுவ நிகழ்வுகளை அலசிப்பார்ப்போமானால் உண்மை நிலை புரிந்துவிடப்போகிறது.

புலிகளைப் பொறுத்தவரையில், சமீபகால போர் முனைகளில் கிடைத்துவரும் தோல்விகளும், யாழ்நகர வீழ்ச்சியும்-இராணுவ ரீதியான பின்னடைவும், புலிகள்இவ்வளவுதானா என்ற கணிப்பீடும் இன்று மலைபோல் எழுந்து நின்று புலிகளை எச்சரிக்கை செய்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலும் தோல்விகளில் இருந்து மீள்வதற்குப் பல வழிகளைத் தேடி யுத்தத்தை தொடர்வதிலேயே தமது முழுமுயற்சியையும் செலுத்துகிறார்கள் என்பது வன்னிப் பெருநிலத்தில் இருந்து கிடைக்கும் செய்திகளாகும்.

## புலிகளுக்குள் யுத்தம் யுத்தத்திற்குள் மக்கள்

இதன் முதல் கட்டமாக, யாழ்குடாநாட்டு யுத்தத்தின் விளைவால் புலிகளின் கட்டாயத்தின் பேரில் இடம்பெயர்ந்த லட்சக்கணக்கான வலிகாமம் வாழ் தமிழ்மக்கள் வன்னிப்பெருநிலத்தில் குடியமர்த்தப்படுவதை சாதாரண விடயமாக மதிப்பிட முடியாது. ஏனெனில் இந்த மக்களை குடியமர்த்துவதன் பின்னணியில் புலிகளின் பல இராணுவத் திட்டங்கள் அடங்கியிருப்பதும் எதிர்காலத்தில் நிகழப் போகும் யுத்த அனர்த்தங்களுக்கு இது அடித்தளமாக அமையும் என்பதும் ஒரு பலமான கணிப்பீடாகும்.

யாழ்நகரை புலிகளிடமிருந்து கைப்பற்றி, தனது மேலாதிக்கத்தை அரசும் இராணுவமும் செலுத்தினாலும், தொடரப் போகும் மாற்றங்களை அரசும் இராணுவமும் கவனத்தில் எடுக்க வேண்டும். தமிழ்மக்களை புலிகளிடம் இருந்து மீட்கப்போய், அவர்களை ஒட்டுமொத்தமாக புலிகளின் வலைக்குள் சிக்கவைத்து, இன்று புலிகளுக்கு யானை பலத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் நிலைமையை சற்று ஆராய்ந்து பார்த்தால், யாழ் நகரைக் கைப்பற்றிவிட்டோம் என்று பெருமை பேசும் அரசும் இராணுவமும் கவலைப்பட வேண்டிவரும்.

ஏனென்றால் இன்று வடமராட்சி, தென்மராட்சி, வன்னிப் பெருநிலம், வன்னிக்காடு ஆகியன புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாலும், அங்குள்ள சகல கல்லூரிகளும் மூடப்பட்டு மாணவர்கள் புலிகளின் படை அணியில் திரட்டப்பட்டு பலவகையான இராணுவ, உளவுப் பயிற்சிகள் கொடுக்கப்படுவதாலும், இந்த இனப்பிரச்சினை சுலபத்தில் முடிவுக்கு வரும் பிரச்சினை அல்ல என்று தெளிவாகத் தெரிகிறது. அத்துடன் இந்த புதிய ஆள்திரட்டல் மூலம் 25000 பேர் கொண்ட பலம்பொருந்திய புலிகளின் படை அணியும் வடகிழக்கு பிரதேசத்தில் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதையும் மறந்துவிடக்கூடாது.

## பிஸ்டல் படையும் பிரபாகரன் விருந்தும்

புலித்தலைவர் பிரபாகரனின் நேரடிக் கண்காணிப்பில் விசேஷ பயிற்சியுடன் கூடிய பிஸ்டல் படை ஒன்றை புதிதாக புலிகள் உருவாக்கியிருக்கிறார்கள். தமக்கு வேண்டாதவர்களைப் போட்டுத்தள்ளுவதும், தமக்குள்ளேயே சந்தேகப்படும் நபர்களைப் போட்டுத்தள்ளுவதும் இவர்களின் பிரதான செயல்பாடாகும். அதோடு மிகக் கடுமையான பாதுகாப்பு நிறைந்த அரசின் கட்டுப்பாட்டு இடங்களுக்குள் ஊடுருவி பிரதான சிங்கள, தமிழ் அரசியல் தலைவர்களையும், அரச உயர் இராணுவ அதிகாரிகளையும் தனி ஒரு ஆளாக நின்று சுட்டுக்கொல்வது; தனது பணி முடிந்ததும் தப்பிச் செல்ல முயற்சிப்பது; முடியாதபட்சத்தில் தற்கொலை செய்துகொள்வது.

ஒரு வி.ஐ.பி.யை கொல்வதற்கு ஒரு பிஸ்டல் புலி என பிரபாகரனால்அமர்த்தப்பட்ட இந்த இளம்புலிகள் பிரபாகரனுடன் சேர்ந்து கடைசிஇரவுணவை முடித்துக்கொண்டு பல இடங்களில் ஊடுருவிக் கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மை. இந்த எச்சரிக்கையை புலிகளின் தாக்குதல் இலக்கில் இருப்பவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, வன்னிப்பெருநிலத்தில் குடியமர்த்தப்பட்டிருக்கும் மக்கள் புலிகளின் கிடுக்கிப்பிடிக்குள் சிக்கியிருக்கிறார்கள் என்பதே உண்மை. புலிகள் தங்கள் முகாம்கள் தளங்கள் ஆகியவற்றைச் சுற்றியே இந்த மக்களை குடியமர்த்தியிருக்கிறார்கள். புலிகளின் முகாம்கள்மீது விமானத் தாக்குதல்கள் எதிர்காலத்தில் நிகழ்ந்தாலும், மக்களும் சேர்ந்தே கொல்லப்படுவார்கள். இது சந்திரிகா அரசாங்கத்திற்கு சர்வதேச ரீதியில் அவப்பெயரை ஏற்படுத்தமுடியும். தங்களது பிரச்சாரத்திற்கும் இந்த மக்களின் படுகொலைகள் பயன்படும் என்றும் புலிகள் கருதுவதாகத் தெரிகிறது.

அதுமட்டுமல்லாது விமானத்தாக்குதல் மூலம்தான் புலிகளின் இராணுவ நிலைகள் முதலில் நிர்மூலமாக்கப்படுவதால் அதை ஓரளவுக்கேனும் மட்டுப்படுத்துவதற்கு புலிகள் இந்த யுத்தியை கையாண்டிருக்கலாம். அப்பாவி மக்கள் விமானத் தாக்குதல் மூலம் கொல்லப்படுவது இன்று சர்வதேச ரீதியில் ஒரு பாரதூரமான குற்றமாக கருதப்படுவதால் புலிகளின் இந்த குடியேற்றத் திட்டம் அரசுக்கும் நெருக்கடியைக் கொடுத்திருக்கிறது என்றே சொல்லவேண்டும்.

## ‘யுத்தத்தால் சுபீட்சம்’ புலிகளின் சூத்துமாத்து

நடந்து முடிந்த யாழ்குடாநாட்டு யுத்தத்தில் மக்களை தமது பிடியில் இருந்து நழுவவிட்டு, தனித்து நின்று இராணுவத்துடன் மோதிய புலிகள் யாழ்நகரை கைவிட்டு ஓடியதை மறந்திருக்க மாட்டார்கள். மீண்டும் ஒருமுறை மக்கள் இல்லாத யுத்தத்தை இராணுவத்துடன் நடாத்த புலிகள் துணிய மாட்டார்கள். அதற்காகவே இன்று வன்னிப் பெருநிலத்தில் மக்களை மையப்படுத்தி யுத்த வியூகங்களையும்-முஸ்தீபுகளையும் புலிகள் அமைத்து வருகிறார்கள்.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், இங்கு குடியமர்த்தப்படும் மக்களுக்கு ஒரு சுபீட்சமான வாழ்க்கை ஏற்படுத்திக் கொடுக்கப் போகிறோம் என்று நாக்கில் தேன் தடவுவது. மக்களை தொடர்ந்து ஏமாற்றுவதில் நாங்கள் படு கில்லாடிகள் என்று புலிகள் நிரூபித்திருக்கிறார்கள்.

ஏனென்றால், யாழ்நகரை தமது நிர்வாகத்தின் கீழ் வைத்திருந்த கடந்த ஐந்துவருடகாலத்தில் மக்களுக்கு எந்தவித நன்மையும் செய்யாது அவர்களது எஞ்சியிருந்த பணத்தையும் பொருள்களையும் பறித்தெடுத்து இழப்பதற்கு உயிரைத் தவிர எதுவுமில்லை என்ற நிலைக்கு ஆளாக்கிய புலிகள், மக்களுக்கு சுபீட்சமான வாழ்வு கொடுக்கப் போகின்றோம் என்று வாய்கூசாமல் பொய் சொல்வது கடைந்தெடுத்த அயோக்கியத்தனம்.

எதிர்காலத்தில் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இறுதி யுத்தமாக மாறப்போகும் வன்னிப் பெருநிலத்தின் கொலைக் களத்திற்கு மக்களை புலிகள் விரட்டிச்செல்வதை தடுப்பதற்கு இன்று யாருமே இல்லை என்பதுதான் கவலைக்குரிய விடயமாகும்.

ஒரு அரசின் இராணுவத்துடன் நேருக்கு நேர் எதிர்கொண்டு தாக்கும் போர் முறையால் யாழ்நகரை பறிகொடுத்த புலிகள், முற்றாக தமது போர் முறைகளை மாற்றியே ஆகவேண்டும் என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். கெரில்லா போர்முறையில் நன்கு தேர்ச்சி பெற்ற புலிகள் சிறிய சிறிய குழுக்களாகவும் பெரிய குழுக்களாகவும் பிரிந்து இராணுவத்திற்கு எதிராக தாக்குதலைத் தொடர்வார்கள் என்றே நம்பப்படுகிறது.


வடக்கு கிழக்கு பிரதேசத்தின் காட்டுப்பகுதிகள் பெரும்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால் கெரில்லா தாக்குதல் மூலம் இராணுவத்தை சின்னாபின்னமாக்க முடியும் என்பது இவர்கள் எண்ணமாகவும் இருக்கலாம். வட-கிழக்கிற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள இராணுவ நிலைகளைத் தாக்கி அழிப்பதும், இராணுவத்தின் உயிர்நாடியான போக்குவரத்து சாதனங்களை (தரை-வான்-கடலில் வைத்து) நிர்மூலமாக்குவதும் புலிகளின் உத்திகளாக அறியப்படுகின்றது.

இதன் பிரதிபலிப்பாக ஜனவரி 22ம் திகதி விமானப்படைக்குச் சொந்தமான சமீபத்தில் ரஷ்யாவில் இருந்து வாங்கப்பட்ட ஹெலிகப்டர் பருத்தித்துறை கடலில் வைத்து புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கிறது. இதில் முப்படைகளையும் சேர்ந்த 39 போர் வீரர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

## புலிகளின் பின்னால் புரியாத புதிரொன்று

இராணுவவீரர்களின் மனத்திறனையும் தைரியத்தையும் சீர்குலைப்பதற்கு நேரடி யுத்தத்தை விட கெரில்லா யுத்தமே சிறந்தது என்பது வியட்நாம் கெரில்லாயுத்தத்தின் வரலாறு. வியட்நாம் விடுதலைக்கான கெரில்லா போர்முறையில் பிரபாகரன் நம்பிக்கை வைத்திருப்பதால் இது சாத்தியமான வழியாகவும் தோன்றலாம். இராணுவ வீரர்களை கிலிபிடித்து ஓடவைக்கும் இந்த கெரில்லா போர் முறையால் இதுவரை இலங்கை இராணுவத்தில் விடுப்பில் சென்ற 20 ஆயிரம் இராணுவ வீரர்கள் போர்முனைக்கு மீண்டும் திரும்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**இலங்கைப் பிரச்சினையின் தீர்வுக்கான வரைபடம்**




அமெரிக்க போர்வீரர்களை வியட்நாம் கெரில்லாக்கள் எப்படி தமது தாயகத்தை விட்டுத் துரத்தி அடித்தார்களோ அதேபோல் நாமும் சிங்கள இராணுவத்தைத் துரத்தி அடிப்போம் என்று யாழ்நகரை பறிகொடுத்த பின்பும் பிரபாகரன் துணிந்து நிற்பது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. பிரபாகரனின் பின்பலம் இதுவரை யாராலும் கண்டுபிடிக்க முடியாத ஒரு புதிராகவே இருக்கிறது.

தமிழ் நாட்டின் கடலும் தரையும் இந்திய கடற்படையால் சீல்வைக்கப்பட்டு, புலிகளின் கடல் போக்குவரத்து தடைப்பட்டு பாதிப்பை ஏற்படுத்தினாலும் எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து வெடிமருந்துகளையும் ஆயுதங்களையும் கப்பல் மார்க்கமாகக் கொண்டு வந்து தமிழ் ஈழம் கிடைக்கும் வரை இராணுவத்துடன் யுத்தம் செய்வேன் என்று பிரபாகரன் மார்தட்டுவது உண்மையில் மிகப்பெரிய பின்பலம் இல்லாமல் இவற்றை சாதிக்கமுடியாது என்றே சொல்ல வேண்டும். ஆகவே புலிகளுக்கு பின்னால் ஒரு பெரிய பின்பலம் இருந்துவருகின்றது என்பது உண்மையே. அது ஏதாவது ஒரு நாடா? அல்லது ஆயுதக்கடத்தல் கும்பலா? இதை அரசாங்கம் கண்டுபிடிக்க வேண்டும்.

## அடுத்தது என்ன செய்யப்போகிறார்கள்?

இது ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் அரசும் இராணுவமும் யாழ் நகரைக் கைப்பற்றிய வெற்றியை தக்கவைப்பதற்கும், எதிர்காலத்தில் புலிகளின் தாக்குதல்களை சமாளிப்பதற்கும், இராணுவவீரர்களின் மன உறுதியும் தைரியமும் தளர்ந்து போகாமல் இருப்பதற்கு உண்டான தேவைகளை கவனிப்பதற்கும், புலிகளுக்கு எதிரான தாக்குதலை தொடர்வதற்கும் தமது போர்நிலைகளை மேலும் பலப்படுத்தி வருவது புலனாகிறது.

இருப்பினும் இன்று வட-கிழக்கின் இராணுவ நிலைமைகள் இராணுவத்திற்கு சற்று சாதகமாக இருந்தாலும் அவர்கள் முன்பும் மலைபோல் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கிறது. அடுத்து என்ன செய்யப் போகிறார்கள் என்னும் கேள்வியுடன் பார்க்கும்போது ஐந்து பிரதான அம்சங்களைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

1. யாழ் நகர்-பலாலி போர்முனைகளிலிருந்து தாக்குதல் தொடுத்து தென்மராட்சியையும், வடமராட்சியையும் கைப்பற்றி புலிகளின் விமானத் தாக்குதலுக்கு முற்றுப்புள்ளி வைத்தல்.
2. ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து பூநகரி இராணுவ முகாமிற்கான பாதையை திறந்து, புலிகளின் கிளாலி கடல் பயணத்திற்கான மார்க்கத்திற்கு ஒரு முடிவு கட்டுவது.
3. ஆனையிறவு முகாமிலிருந்து வவுனியா-தாண்டிக்குளம் வரையிலான 70 கி.மீற்றர் தூரம் கொண்ட யாழ்ப்பாணம்-கண்டி வீதியை புலிகளிடமிருந்து மீட்டு முகாம்களுக்கிடையிலான தரைவழிப் பாதையை ஏற்படுத்தல்.
4. வவுனியா-மன்னார் வீதியையும், மன்னார்-பூநகரி சங்குப்பிட்டி வீதியையும் இராணுவம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல்.
5. கிழக்குப் பகுதிகளில் இருந்து புலிகளை விரட்டி, மீண்டும் இராணுவம் தனது ஆளுமையை கொண்டு செலுத்துதல்.

## உண்மையில் அமைதி வர அரசு விரும்புமானால்....

மேலே கூறப்பட்டிருக்கும் இந்த ஐந்து பாரிய இராணுவ நடவடிக்கைகளை ஒரே நேரத்தில் இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ள முடியாது என்பதும், வருடக்கணக்காக தொடர்ந்தாலும் இலங்கையின் பொருளாதாரம் அதற்கு இடங்கொடுக்காதென்பதும் உண்மை. இருந்தாலும், இந்த ஐந்து தடைகளையும் முழுமையாக இராணுவம் வெற்றியுடன் தாண்டினால்தான், வட-கிழக்கில் அரசாங்கம் தனது பிடியை இயல்பாக வைத்திருக்க முடியும்.

ஆகவே இலங்கை அரசாங்கம் உண்மையாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு விரும்பினால், தன்னால் தனித்து நின்று இதனை சாதிக்க முடியாது என்பதை முதலில் உணரவேண்டும்.

எனவே, இந்தியாவின் உதவியுடன் இலங்கைத் தமிழ் மக்கள் கௌரவமாகவும் தன்னாதிக்கத்துடனும் வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதன் மூலமே இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும். இந்தியா ஏற்கனவே இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டு இருப்பதால், அதற்கான கடமையும் பொறுப்பும் இன்னும் முடிந்துவிடவில்லை என்பதே உண்மை. இதனை இலங்கை அரசு உணர்ந்து செயற்படுமாயின், விரைவில் ஓர் சமாதானத்தை உருவாக்கலாம்.

**என். ஆர். சோமு**

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com





# அகஸ்தியர் என்னும் இலக்கிய இளைஞன்

எழுபது வயதில் ஒரு இளைஞன் இருந்தான் என்றால் அது வியப்புக்கும் ஆச்சரியத்துக்குமுரிய விடயம்தான். ஆனால் அப்படி ஒரு வயதுமுதிர்ந்த இலக்கிய இளைஞன் நம்மிடையே வாழ்ந்திருந்தான் என்பது பெருமைக்குரியது.

அகஸ்தியர் என்னும் குறுமுனியின் பெயரைத் தனதாக்கிக் கொண்டு இலக்கிய உலகில் ஓர் உயர்ந்த மனிதனாக வாழ்ந்த சவரிமுத்து இன்று நம்மிடையே இல்லை. ஐம்பது ஆண்டு காலங்கள் தொடர்ச்சியாக எழுதிவந்ததனால் தனது இறுதி மூச்சுவரை எழுத்துக்குள்ளேயே மூழ்கி முத்தெடுத்ததனால்தான் அவரால் இலக்கிய உலகில் இளைஞனாக வலம்வர முடிந்தது.

தனது இருபது வயது தொடக்கத்தில் கவிதை எழுதுவதன் மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்த இவர் சிறுகதை, குறுநாவல், நாவல், நாட்டுக்கூத்து, நாடகங்கள், விமர்சனங்கள் என எழுத்தை தனது சுவாசமாக்கி, அதனை வடிகட்டி நமது சமூகத்துக்கு அனுப்பிவைத்தவர்.

எமது நாட்டு மக்கள் அறியாமையிலும், மூடப்பழக்கவழக்கங்களிலும், வறுமையிலும் சிக்கித் தவிப்பதைக் கண்டு, அதற்கெதிரான போராட்டக் கருவியாக தாம் எழுதுவதை பிரயோகித்ததாக கூறியிருக்கும் அகஸ்தியர் என்னும் பழுத்த கனியின் இலக்கிய சுவையை இன்றைய இளைஞர்கள் கூட சுவைப்பதுதான் அகஸ்தியருக்கு கிடைத்த பெருவெற்றி.

மக்கள் எழுத்தாளர் முன்னணியின் தலைமைக் குழுவில் ஒருவராகவும், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ் கிளைத் தலைவராகவும் இலக்கியப் பணியாற்றிய அகஸ்தியரின் படைப்புக்கள் தமிழ்மொழியில் மட்டுமன்றி சிங்களத்திலும் வெளிவந்திருக்கின்றன. தமிழ் நாட்டில் தாமரை, கலைமகள், ஜீவா போன்ற பத்திரிகைகளிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்தன. சோவியத்திலிருந்து வெளியான சிறுகதை தொகுப்பில் இவரது சிறுகதை ஒன்று வெளிவந்தது.

மண்ணில் தெரியுதொரு தோற்றம், திருமணத்திற்காக ஒரு பெண் காத்திருக்கிறாள் ஆகிய நாவல்கள் வெளிவந்து இவரை அடையாளம் காட்டின. 'இருளினுள்ளே' என்னும் குறுநாவல் தொகுதி, அகஸ்தியர் கதைகள் என்னும் சிறுகதை தொகுப்பும் வெளியிடப்பட்டு வரவேற்பைப் பெற்றன. யாழ்ப்பாணத்தில் அதிசிறந்த நாட்டுக் கூத்துக் கலைஞரான பூந்தான் யோசேப்புவின் வாழ்க்கையை வரலாறாக வெளியிட்டுவைத்தார். இது ஒரு சிறந்த வரலாற்று இலக்கிய ஆவணமாகும்.

1986முதல் பாரிசிலிருந்து எழுதிவந்த அகஸ்தியரின் "கலை இலக்கியமும் வர்க்க நிலைப்பாடும்" என்ற கட்டுரைத் தொகுப்பு "மேய்ப்பர்கள்" என்னும் சிறுகதைத் தொகுப்பு, அகஸ்தியர் பதிவுகள் என்னும் கட்டுரைத் தொகுப்பு ஆகியன வெளிவந்துள்ளன.

மண்ணில் தெரியுதொரு தோற்றம் என்னும் நாவல், நாட்டுக்கூத்துக் கலைஞர் வரலாறு என்னும் நூல், 'மேய்ப்பர்கள்' சிறுகதைத் தொகுப்பு ஆகியன வெவ்வேறு காலங்களில் இலங்கையில் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றன.

தமிழ் பேசும் மக்கள் மீது பௌத்த சிங்களப் பேரினவாத அரசுகள் மேற்கொண்ட அடக்குமுறைகளைக் கண்டு, ஆக்ரோஷ ஆவேசம் கொண்டு சாகித்திய மண்டலப் பரிசுகளை நிராகரித்ததாய் தெரிவித்தார். இவரின் நண்பரான வி. பொன்னம்பலத்தின் மறைவு பற்றிக் குறிப்பிடும்போது, "கோடை இடி மின்னல் பொறியாக மனசை ஓர் அந்தகார சுழற்சியில் ஆழ்த்தியே விட்டது. வி.பி.யின் இழப்பு ஒரு வெறிச்சோடிப்போன சூனியத்து உலகத்துள் நம்மை ஆழ்த்தும் வல்லமை கொள்ளுகிறது". என்று குறிப்பிட்டார்.

அகஸ்தியரின் இலக்கிய ரதத்தின் சக்கரம் ஐரோப்பாவில் உருண்டபோது அவை திசை மாறிப் போனவையாகவே தோற்றமளிக்கிறது. இவரது எழுத்துக்கும் கொள்கைக்கும் ஒவ்வாத வெளியீடுகளில் எழுதினார். அதற்கான காரணம் புதிர்க் கோளமாகவே இருக்கிறது. புகலிடத்தில் அவர் எழுதுவதற்கான பட்டறை கிடைக்கவில்லை என்றே தோன்றுகின்றது.

அதனாலோ என்னவோ அவர் மனித நேயத்தைப் புறந்தள்ளிவிட்டு பாசிச வீரத்தை விலைபோக வைத்த மாயைப் பத்திரிகைகளில் எழுதினார். இவற்றின் வாசகர்களுக்கு, இவரின் எழுத்துக்கள் குருடர் பார்த்த யானைக் கதையாகத்தான் இருக்கும். இவரின் எழுத்துக்களைப் பதித்துக் கொள்வதை இந்த வெளியீட்டாளர்கள் பெருமையாகக் கருதியிருக்ககூடும். ஆனால் அகஸ்தியருக்கு அவை பெருமையில்லை. நிறைகுடம் பாலில் விழுந்த விஷத்துளிகளே இவைகள்.

அகஸ்தியரின் இரு வெளியீடுகளை வெளியிட்டு அவருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதென ஒரு பத்திரிகை புறப்பட்டது. வெளியீடு இடம்பெற்ற சபையோ இலக்கியம் கிலோ என்னவிலை என்று கேட்குமிடம். அகஸ்தியர் சுகயீனம் காரணமாக வரமுடியவில்லை. அவரின் உறவினர் ஒருவருக்கு பொன்னாடை போர்த்தப்பட்டு அகஸ்தியரின் எழுத்துக்களுக்கு கறைபூசப்பட்டது என்பது மேற்குறிப்பிட்ட விஷத்துளிகளுக்கு ஒரு சிறிய உதாரணமாகும். இந்நிலைக்கு மத்தியிலும் அவரை அடையாளம் கண்டுகொண்ட விரல் விட்டு எண்ணக்கூடிய புகலிட முற்போக்கு இலக்கியவாதிகள் தம்மால் முடிந்தவரை இவரைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

"எழுத்தாளன், மனிதகுலத்தை நேசிக்கும் ஒரு மனிதாபிமானி: அவனின் இதயத்திலிருந்து எழும் இலக்கிய ஊற்றுக்கள் சமுதாய உயர்வுக்காக வியாபித்துக்கொண்டிருக்கும்" என்று செவ்வி ஒன்றில் தெரிவித்த அகஸ்தியர் ஆயுதப் போராட்ட காலத்தில் வாழ்ந்தவர். தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திலும், மானுட விடுதலையிலும் இவரின் ஆக்ரோஷமான விறல்மிகு எழுத்துக்கள் தடம் பதிக்கும். சமாதான எதிரிகளான அசுர வித்துக்களை இவரின் பேனா நிர்மூலம் செய்யும் என எதிர்பார்த்திருந்தவர்களுக்கு இவர் விட்டுச் சென்றுள்ளது ஏமாற்றமே.

"எழுத்தாளன் வரித்துக் கட்டிக்கொண்ட ஏதாவதொரு இலட்சியத்திலிருந்துதான் இலக்கியங்கள் பிறக்கின்றன. இவ்வகையான இலக்கியங்கள்தான் சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்" என்று கூறிச் சென்றுள்ள இந்த இலக்கிய இளைஞனின் எழுத்துக்கள் யாவும் வெளியிடப்படவேண்டிய வரலாற்றுக் கடமை தமிழ் இலக்கிய உலகுக்குண்டு.

– சாரதி, ஜெர்மனி.

## அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய காரியங்கள்

1. இடம்பெயர்ந்த யாழ் மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

2. இராணுவ ரீதியான–ஆயுத வழிப்பட்ட அதிகாரத்துவ அமைப்புக்களுக்குப் பதிலாக சிவில் நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

3. இராணுவ நடவடிக்கையின்போது சேதமடைந்த மக்களின் சொத்துக்கள், உயிரிழப்புகளுக்கு முழு அளவில் நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. சேதமடைந்த பாடசாலைகள், கோயில்கள், தேவாலயங்கள், பல்லைக்கழகங்கள், வைத்தியசாலைகள் நூல்நிலையங்கள், அரச அலுவலகங்கள், வங்கிகள் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

5. தொழிற்சாலைகள், ஏறத்தாழ இறந்த நிலையை அடைந்துவிட்ட மீன்பிடி, விவசாயம் ஆகிய தொழில்கள் புனருத்தாரணம் செய்யப்பட வேண்டும்.

6. (3,4,5இல்) குறிப்பிட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்ட பாரிய அளவிலான புனருத்தாரண புனர் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

7. யுத்தத்தால் அழிந்துபட்ட பகுதிகளுக்கென சர்வதேச அளவில் கிடைக்கும் உதவிகள் முற்றுமுழுதாக அப்பகுதிகளுக்கே செலவிடப்பட வேண்டும்.

8. பாதுகாப்பு நிதிக்கென நாட்டின் வளங்கள் திரட்டப்படுகின்றனவே.அதைவிட அக்கறைக்குரிய விடயம், அழிவின் விளிம்பில் நிறுத்தப்பட்டிருக்கும் சமுதாயத்தின் வாழ்விற்கான அடிப்படைகளை உருவாக்குவது எனவே அழிந்துபட்ட பகுதிகளை மீட்டெடுப்பதற்கான வளங்களை திரட்டுவது.

9. நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இயல்பான வாழ்க்கை நடந்து கொண்டிருக்கும்போது யுத்த சூழலில் வாழ்பவர்கள் தொழில் செய்வதற்கான உரிமை கல்வி கற்பதற்கான உரிமைகளை இழந்து வாழ்வது பாரபட்சமானதும் அடிப்படை மனித உரிமை மீறலுமாகும். உடனடியாக தொழிற்சாலைகள், அரச அலுவலகங்களை இயக்குதல் வேண்டும்; பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் விரைவில் செயற்படுவதற்கான நிலவரங்கள் உருவாக்கப்படவேண்டும்.

10. எல்லாவற்றுக்கும் மேலாக ஜனநாயக மனித உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். தற்போது அரசு தனது கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறிக்கொள்ளும் பகுதிகளில் அது ஒரு முக்கிய குறைபாடாகும். கடந்த அரசினால் ஆயுதபாணிகளாக்கப்பட்ட பல்வேறு விதமான சக்திகள் சித்திரவதை, கொலை போன்ற செயல்களை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன என்பதனை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். எனவே மக்களை பீதியிலிருந்து விடுவிப்பதற்கு அவர்கள் தமது சுயத்தை வெளிப்படுத்துவதற்கான அச்சுறுத்தலற்ற சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

11. இராணுவ யந்திரம் சிவில் அமைப்புக்கள் மீதும் மக்கள் மீதும் மேலாதிக்கம் செலுத்தும் நிலை இல்லாதொழிக்கப்பட வேண்டும். இல்லாவிடில் இந்த யுத்த யந்திரத்தின் அசுர வளர்ச்சி சகல அரசியல் ஜனநாயக நிறுவனங்களையும் நாசமாக்கிவிடும்.

12. சிறுவர்களை யுத்தத்திலீடுபடுத்தும் கொடுமையிலிருந்து அவர்களை மீட்க வேண்டும். அதேவேளை தெற்கில் இராணுவத்திற்கு கட்டாய ஆள் சேர்ப்பு மேற்கொள்வதும் பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும். எனவே இராணுவ வாதக் கண்ணோட்டத்தினுள் வீழ்ந்துவிடாது இருக்க முயற்சிக்க வேண்டும்.

13. இனப்பிரச்சினை யுத்தத்தின் மூலம் தீர்வுகாணக் கூடியதல்ல என பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு திரும்பத் திரும்ப கூறி வந்திருக்கிறது. எனவே அரசியல் ரீதியான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பேச்சை விட செயல் முக்கியமானது.

14. அரசு முன்வைத்துள்ள தீர்வுத்திட்டம் ஒரு குறைந்தபட்ச அடிப்படையே. எனவே எக்காரணம் கொண்டும் அதனை ஐதாக்கும் முயற்சிகளுக்கு அரசு வளைந்து கொடுக்கக் கூடாது.

15. அதேவேளை வட–கிழக்கில் தமிழர்கள் வாழும் பகுதிகளின் அரசியல் நிர்வாக அலகு ஒன்றாக இருக்க வேண்டும். இதனை பிரிக்க முயற்சித்தால் நிலைமைகள் தற்போதுள்ளதைவிட மோசமாகிவிடும். அடுத்து, வட–கிழக்கின் பிரதேச தொடர்ச்சியைத் துண்டிப்பதற்கென்றே கடந்த அரசினால் உருவாக்கப்பட்ட இராணுவ முகாம்களுடன் இணைந்த திட்டமிட்ட குடியேற்றங்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

16. ஒரு கையால் கொடுத்து மறுகையால் எடுக்கும் விதமாக அமைந்துள்ள அம்சங்கள் நீக்கப்பட வேண்டும். தீர்வுத் திட்ட நகலை பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்குச் சமர்ப்பித்துவிட்டு அரசு பேசாமல் இருந்துவிட முடியாது. மக்கள் கூட்டணி அரசு பதவிக்கு வருவதற்கு முன்னர் தமிழ் மக்களுக்களித்த வாக்குறுதிகளை இக்கட்டத்தில் ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

மேற்கூறிய விடயங்கள்பற்றி பொதுஜன முன்னணி அரசும் ஜனாதிபதியும் பேசி வருகிறார்கள். ஆனால் அவை நடைமுறைக்கு வராத வெற்று வார்த்தைகளாகப் போய்விடக்கூடாது என்பதே எமது விருப்பமாகும்.

மேற்கூறிய விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான எந்த முயற்சிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப். தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

## ஒற்றுமை இல்லாது....

(முன்பக்கத் தொடர்ச்சி)

இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டு ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புளொட், ரெலோ, ஈரோஸ், ஈ.பி.டி.பி. ஆகிய ஐந்து தமிழ்க் கட்சிகளும் ஒற்றுமைப்பட்டுள்ளன. இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குரிய நகர்வுகளில் இத் தமிழ்க் கட்சிகள் ஐக்கியப்பட்டு நின்று ஒரே குரலில் பேசுமென்பது, இன்றைய காலகட்டத்தில், விரக்தியுற்றிருக்கும் தமிழ் பேசும் மக்கள் தரப்பில், மிகவும் நம்பிக்கையூட்டுகிற ஒரு நிகழ்வாகும்.

யாழ்ப்பாணப் பொதுத் தேர்தல் ஆட்சேபணை வழக்கே, இக்கூட்டமைப்பில் கலந்து கொள்வதற்குத் தடையாக இருப்பதாக ஈ.பி.டி.பி. கட்சியினர் தரப்பில் தெரிவிக்கப்பட்ட போது, ஒற்றுமையின் அவசியம் கருதி அவ்வழக்கை வாபஸ் பெறுவதற்கு, அதைத் தாக்கல் செய்திருந்த கட்சிகள் முன்வந்தன.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஐப் பொறுத்தவரையில், அந்தத் தேர்தல் குறித்து, அது ஓர் அடிப்படை ஜனநாயக மீறல் என்ற கருத்தைக் கொண்டிருந்த போதும், இன்றைய சூழ்நிலையில் தமிழ்க் கட்சிகளிடையே ஐக்கிய முன்னணியை உருவாக்க எத்தகைய விட்டுக்கொடுப்பையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்ற புரிதலோடு வழக்கை வாபஸ் பெற முன்வந்தது. ஐக்கிய முன்னணி ஒன்றின் அத்தியாவசியத்தின் நிமித்தம் செய்யப்பட்ட பொறுப்புணர்வு வாய்ந்த விட்டுக்கொடுப்பாக அது சரியாக அர்த்தங் கொள்ளப்பட வேண்டும் என்றும் கோரியது.

இத்தகைய விட்டுக்கொடுப்புகள், புரிதல்களினால் மலர்ந்துள்ள ஒற்றுமையானது தமிழ் மக்கள் தரப்பில் மகிழ்ச்சியான வரவேற்புக்குரியதே. சகல கட்சிகளும் ஒருமித்து தம்மிடையே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் தமிழ் பேசும் மக்களின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முடிவுகளிலும், செயற்பாடுகளிலும் தமது முழுமையான பங்களிப்பையும் செலுத்த முன்வரவேண்டும்.

**ஒற்றைச் சக்கரத்தால்**
**வண்டி கூட உருளாது**
**ஒற்றுமைச் சக்கரத்தால்**
**உலகையே உருட்டி விடலாம்**

"அறைந்து சாத்தப்படுகிற
கதவுகளுக்கென்ன தெரியும்
வெளியே நிற்பவர் துயரம் பற்றி"

www.padippakam.com




சித்தார்த்தன்


சுரேஷ்


வினோ


டக்ளஸ்


சிவா


சங்கர் ராஜி

# தமிழர் தரப்பு என்ன செய்யப் போகிறது?

அரசு தனது தீர்வுத்திட்டத்தை பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன் சமர்ப்பிப்பதற்குத் தயாராகி விட்டது.

ஆனால் பகிரங்கமாக முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தில் தமிழ் மக்களின் ஜீவாதாரமான சில பிரச்சினைகளைப் பற்றி எதவுமே குறிப்பிடப்படவில்லை. ஆனால் தமிழர்கள் வாழும் பிரதேசங்களைத் துண்டாடுது பற்றி அரசியல் வட்டாரங்களில் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

1. வட-கிழக்கை ஒரே அரசியல் நிர்வாக அலகாக இல்லாமல் அவற்றைத் தனித் தனியாகப் பிரிப்பது என்ற நிலைப்பாடு.

2. அதேபோல் வட-கிழக்கின் எல்லைகளை மீள் நிர்ணயம் செய்வதன் மூலம் 3 பிராந்தியங்களை உருவாக்குவது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் வட-கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்தன. ஆனால் தற்போதைய தீர்வுத்திட்டம் இந்த குறைந்தபட்ச நிலமையைக்கூட இல்லாமல் செய்கிறது. வட-கிழக்கின் எல்லைகளை மீள் ஒழுங்கு செய்தல் என்ற நிலவரம் கூட இருக்கவில்லை.

ஆனால் மக்கள் கூட்டணி அரசின் தீர்வுத்திட்டத்தில் உள்ள இந்தப் பாரதூரமான நிலையை இங்கு குறிப்பிடாமல் விட முடியாது.

சகல தரப்பிலும் சில விட்டுக்கொடுப்புக்கள் இருக்க வேண்டும் என்ற ஒரு அபிப்பிராயம் அரச தரப்பில் நிலவுகிறது.

தமிழ்த்தரப்பு இவ் விட்டுக்கொடுப்புக்களுக்குத் தயாராகி எவ்வளவோ காலமாயிற்று. உதாரணமாக தமிழ் அரசியல் சக்திகள், வட-கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய தாயகம் என்ற வரலாற்று உண்மைக்கப்பால் குறைந்தபட்சம் தமிழ்ப் பிரதேசங்கள் ஒரே அரசியல் நிர்வாக அலகாக இருக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கின்றன.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்ட வட-கிழக்கின் தற்காலிக இணைப்பைக் கூட தமிழ் அரசியல் சக்திகள் ஏற்றுக் கொண்டிருந்தன.

அத்தகைய ஒரு நிலவரத்தில் தமிழர் தரப்பு இன்னும் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

எல்லைகள் மீள்நிர்ணயம் செய்தல் என்ற விடயத்தில் வட-கிழக்கின் எல்லைகளே மீள்நிர்ணயம் செய்யப்பட இருக்கின்றன?

ஆனால் அதிகாரப் பரவலாக்கல் நடைபெறும் எல்லா மாகாணங்களுக்கும் இது பொருந்துமா என்ற நியாயமான கேள்வியும் எழவே செய்கிறது.

உதாரணமாக மத்திய, ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களில் மலையகத் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கென என்ன செய்யப் போகிறார்கள்? தென்மாகாணத்தில் முஸ்லீம்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கென என்ன நடவடிக்கைகளை எடுக்கப்போகிறார்கள்?

"ஊருக்கே உபதேசம் உனக்கல்லடி கண்ணே" என்பது போலல்லவா செயற்பாடுகள் அமைகின்றன.

உதாரணமாக மதம். இந்திய அரசியலமைப்பை ஒத்ததென்று கூறுகிறீர்கள்... அந்த மாபெரும் நாடு மதச்சார்பின்மையை அரசியலமைபில் உறுதிப்படுத்தியிருக்கிறது. ஆனால் இங்குள்ள மத மேலாதிக்கவாதிகளைத் திருப்திப்படுத்த பௌத்த மதத்திற்கு சிறப்பிடமளித்துள்ளீர்கள்.

ஆனால் மறுதரப்பில் தமிழர்களின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கான பிரதேச இணைப்பை அலட்சியம் செய்கிறீர்கள்.

"ஒரு கண்ணில் சுண்ணாம்பும் மறு கண்ணில் வெண்ணையும்" வைக்கும் விளையாட்டல்லவா இது.

இந்தத் தீர்வுத் திட்டம் பாரபட்சங்களுக்கு இடமளிப்பதாக இருக்கக்கூடாது என்ற அதீத அக்கறையிலிருந்தே இவற்றைச் சுட்டிக்காட்டுகிறோம்.

இந்த நாட்டில் நிலவும் பிரச்சினை இனப்பிரச்சினை என ஒப்புக்கொள்ளப் பட்டால் அந்த அடிப்படையிலேயே தீர்வுகாணப்பட வேண்டும். இதனை வெறும் இயந்திரீக ரீதியான நிர்வாகப் பிரச்சினையாக மாற்றுவதான நடைமுறை ஒருகாலமும் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்காது.

மக்கள் கூட்டணி அரசு இந்த நாட்டில் இனப்பிரச்சினை இருக்கிறது என்பதனை ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆனால் தீர்வு பற்றிய நடைமுறைகளில் அதன் ஆக்கபூர்வமான பிரதிபலிப்புக்களைக் காணமுடியவில்லை.

இதய சுத்தியுடன் பிரச்சினைகளை அணுகுவதாக இருந்தால் நேரிடையாக அணுகவேண்டும். தமிழர்களின் பிரதேச இணைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வடகிழக்கில் தமிழர்கள் வாழும் பிரதேசங்களைத் துண்டாடுவதன் மூலம் தமிழர்களின் உரிமைக்குரலைப் பலவீனப்படுத்துவது. தமிழ் அரசியல் சக்திகளை ஒன்று சேரவிடாமல் தடுப்பது. அவற்றை உதாசீனம் செய்வது எல்லாம் வெறுமனே தமிழ் மக்களுக்கு செய்யப்படும் அவமரியாதையல்ல. இந்த நாட்டின் சகல சிறுபான்மையினருக்கும் செய்யப்படும் அவமரியாதையுமாகும்.

இத்தகைய செயல்களின் உட்பொருள் இனங்கள் பரஸ்பர தோழமையுடன் சகவாழ்வு வாழ்தல் என்பதல்ல; பெரும்பான்மை இனத்தவருக்கு இசைவுபட்டு வாழ்தல், இன்னும் விரிவான அர்த்தத்தில் பேரினவாதத்திற்கு இசைவுபட்டு வாழ்தல்.

இதனைத்தான் பிரபாகரனின் இராச்சியத்திலும் தமிழர்கள் கண்டார்கள். அதுதான் அங்கே அந்த புலி இயக்கத்திற்கு இசைவுபட்டு வாழ்தல்.

பிரபாகரனின் ஜனநாயக விரோத செயற்பாடுகளை தயவுதாட்சணியமின்றி எதிர்க்கும் அரசு, தமிழ் மக்களின் பிரச்சினை தீர்வு விடயத்தில் ஏன் அதேமாதிரியான ஒரு நடைமுறைக்கான அத்திவாரத்தை இட முனைகிறது?

வட-கிழக்கு இணைப்புக்கு கிழக்கின் தமிழர்கள் சம்மதமில்லை என்ற ஒரு அபிப்பிராயம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

நாடளவில் மக்களிடையே ஐக்கயத்தைப் பற்றிப் பிரச்சாரத்தை நடாத்திக்கொண்டு வட-கிழக்குத் தமிழர்கள் மத்தியிலுள்ள சாதாரண முரண்பாடுகளைக் கூர்மைப் படுத்தும் வேலைகளில் நேர்மை இருக்கிறதா? அல்லது இதய சுத்திதான் இருக்கிறதா? தனிப்பட்ட அபிப்பிராயங்களை அரசியல் அபிப்பிராயங்களாக மாற்றுவது எந்தளவு நியாயமானது?

தமிழர்கள், தாம் தமிழர்கள் என்ற ரீதியில் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப் பட்டதனால்தான் போராடினார்கள். தாம் ஒன்றாக இருப்பதே தமது பாதுகாப்பிற்கு உத்தரவாதம் என்பது அவர்களின் அரசியல் நிலைப்பாடு. இங்கு பேனைப் பெருமாளாக்கும் முயற்சிகள் அல்லவா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு முகம் கொடுக்க முடியாமல் போன நிலையில் பிரித்தானியர்கள் பாகிஸ்தான் பிரிவினையை ஊக்கப்படுத்தவில்லையா?

ஆனால் காலனியாதிக்கச் சுதந்திரம் பற்றி வாய் கிழியப் பேசுவோர் நிறைந்த எமது நாட்டில், பிரித்தானியர்களிடம் இரவல் வாங்கப்பட்ட பிரித்தாளும் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது.

அடுத்த விடயம் தமிழர் பிரச்சினையின் வளர்ச்சி, பரிணாமம், வெவ்வேறு கால கட்டங்களில் முன்வைக்கப்பட்ட தீர்வுகள் எல்லாம் இங்கு. புறந்தள்ளப்படுகின்றன.

ஐம்பதுக்கு ஐம்பது, சமஷ்டி, தனிநாடு என முனைப்படைந்த பிரச்சினை தற்போது மீண்டும் ஐக்கிய இலங்கைக்குள் நியாயமான தீர்வு என்ற நிலைக்குச் சென்றிருக்கிறது. ஆனால் தமிழர்களின் பிரதேசங்களின் இணைப்பை துண்டித்தல் ஒரு செயற்கையான, தமிழ் மக்களின் அபிலாஷைகளைக் கருத்துக்கெடுக்காத நடவடிக்கை மாத்திரமல்ல. தமிழர்களின் அபிலாஷைகளை சிரச்சேதம் செய்யும் நடவடிக்கையுமாகும்.

இந்தியஇலங்கை ஒப்பந்தம்வரை தற்காலிக இணைப்பு என்றளவிற்கு சென்றிருந்த விடயம் தற்போது பிரிப்பு, எல்லை மீள் நிர்ணயம் என்றளவிற்குச் சென்றுள்ளது. அரசு இந்தப் பாரதூரமான தவறை இழைக்கிறது என்பது ஒருபுறமிருக்கட்டும். தமிழர் தரப்பு இது விடயத்தில் என்ன செய்யப் போகிறது?

என்னதான் நிலவரங்கள் இருந்தாலும் தமிழ் மக்களின் ஜீவாதாரமான பிரச்சினைகள் தொடர்பாக தமிழர் தரப்பு ஒற்றுமையுடனான உறுதியான நிலைப்பாட்டை எடுத்தாக வேண்டும்.

இது விடயத்தில் முஸ்லீம்களின் அரசியல் கட்சிகளதும், சிங்கள மக்கள் மத்தியிலுள்ள முற்போக்கு சக்திகளதும், புத்திஜீவிகள், மனித உரிமைவாதிகள் மற்றும் ஜனநாயக சக்திகளினதும் ஆதரவு பெறப்பட்டாக வேண்டும்.

-எல். திருநாவுக்கரசு

## வாழவே பிறந்தோம் முகடும் முடியுமாய் வாழவே பிறந்தோம்



சிறீயின் மரணம் எத்தகையது?

அகதிகளாகப் போய்விட்ட எமது மக்களின் வாழ்க்கையை மீள் நிர்மாணிப்பதற்கான பணியில் ஈடுபட்டு இருந்தவர் அவர். அகதி வாழ்வே நிரந்தரமாகி எமது சமுதாயம் சீரழிந்து விடக்கூடாது என்ற அந்தரங்க சுத்தியுடன் செயற்பட்டவர். யாருடனும் அதிர்ந்து பேசாது இன்முகத்துடன்... மிக நெருக்கடியான காலகட்டத்தில் மிகக் கடினமான மனிதாபிமான பணிகள் மேற்கொண்டிருந்தவர்.

தான் சார்ந்த சமூகத்திற்காக நேரம் காலம் பாராது உழைக்கும் ஒரு மனிதன் சமுதாயத்தின் மிக அத்தியாவசிய பிரிவைச் சேர்ந்தவன். அப்படியானால் அவனைக் குரூரத்தனமாக உடல் மீதி இன்றி அழிப்பவர்கள் சமுதாயத்தில் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள்?

சமுதாயத்தில் இத்தகையோரின் அதிகரிப்பு எத்தகைய விளைவை உண்டாக்கும்? எதனை மிஞ்ச வைக்கும்? சிந்திக்க வேண்டிய கேள்விகளே இவை.

சமுதாயத்தை பீதியின் நிழலில் வாழவைப்பது.

கொடூரமான சர்வாதிகார மனம் படைத்தவர்களின் பின்னால் பலி ஆடுகள் போல் நடக்க வைப்பது. தமது சுயநலம் நிறைந்த சிந்தனைகளுக்கு இசைவாக சமுதாயம் இருக்க வேண்டும் என இவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இத்தகைய ஒரு போக்கு கடந்த 16 வருடங்களில் வளர்ச்சி பெற்ற "எய்ட்ஸ்" போன்ற ஒரு கொடிய தொற்று வியாதியாக பரவி வருகிறது. இதனைத் தடுத்து நிறுத்துவதானால் மக்கள் செயலில் இறங்கி ஆக வேண்டும். செயற்படாவிட்டால் இந்த நோய் முழுச் சமுதாயத்தையே விழுங்கி விடும்.

விராஜினி பாடிய எம்.எச்.எம்.ஷம்ஸின் பிரபலமான தொலைக்காட்சிப் பாடல் ஒலிக்கும்போது சிறீயும் வவுனியா ரயில் நிலையத்தில் வந்திறங்கும் அகதிகளான மக்களுக்கு சேவை செய்துகொண்டு நிற்பார். ஆனால் சிறீயின் மரணம் அந்தப் பாடலின் முகத்தில் இரத்தத்தை பீச்சியடித்தது போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

காட்டுமிராண்டித்தனத்தையும் கொலை வியாதி பிடித்தவர்களையும் சகித்துக் கொண்டுதான் இருக்கப் போகிறோம் என்றால்...

நாம் எல்லோரும் சவப்பெட்டிக் கடைகளை திறப்போம்!

புத்தம் புதிய வாடாத மலர்களைக் கொண்ட மலர் வளையங்களை முன்னரங்கில் அடுக்குவோம்!

வாழ்க மரணம் என்று உரக்கப் பாடுவோம்!

நாம் மனிதர்களே அல்ல, காட்டுமிராண்டிகள் என்று பிரகடனம் செய்வோம்!

சீ! வெட்கம் கெட்ட வாழ்க்கை... சாக்கடையில் நெளியும்புழுவிலும் கேடுகெட்ட வாழ்க்கை.

ஏய் சமுதாயமே! எப்போது விழித்தெழுந்து நிற்கப் போகிறாய்? நீ தொடர்ந்து மௌனமாக இருக்க முடியாது. உனது மானிட சிலிர்ப்பில் உண்மை பிரசவமாகும்! அப்போது படுகொலை செய்யப்பட்ட சிறீ, அவரைப் போன்ற நல்ல மனிதர்கள் புதைகுழிகளிலிருந்து மக்களின் தோள்களில் சுமந்து வரப்படுவார்கள்.

படுகொலை செய்யப்பட்ட சிறீயின் குடும்பத்தினதும், அவர் நேசித்த அகதிகளான எம் மக்களினதும் துயரில் இணைகிறோம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்